RE/MAX BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 24 பெப்ரவரி 2023 இதழ்:- 44

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# தமிழின அழிப்புக் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் முயற்சிகளை

## கனடா ஆரம்பிக்க வேண்டுமென எதிர்கட்சித் தலைவர் வலியுறுத்து!

கனடிய எதிர்கட்சி தலைவர் சிறிலங்காவின் தமிழின அழிப்பில் பங்கு கொண்ட இராணுவ அரசியல் தலைமைகளை உலக நீதிமன்றில் நிறுத்த வலியுறுத்தினார் அண்மையில் கனடிய பாராளுமன்றில் கனடிய பாதுகாப்பு அமைச்சர் அனிதா ஆனந்த் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியின் (3ம் பக்கம் பார்க்க)



# சலசலப்பை ஏற்படுத்தியுள்ள அண்ணாமலையின் யாழ்ப்பாண உரை!



தென்னிந்திய தமிழ்த் தேசியவாதிகளுக்கு எதிராக வழமையாக போரைத் தொடுக்கும் சிங்கள இனவாதிகள் இப்போது தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாலைக்கு எதிராக தாக்குதல் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். இதனால், இலங்கை அரசியலில் அண்ணாமலை பேசு பொருளாகியிருக்கின்றார் அண்ணாமலை இலங்கை அரசியலில் மீண்டும் சலசலப்பை (9ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளது தலைமை பற்றிய உரையாடலும் அறிவியலும்



இலங்கையின் அரசியல் பரப்பில் மீளவும் விடுதலைப்புலிகளது தலைமை பற்றிய உரையாடல் 13.02.2023 தமிழ்த் தேசிய இயக்கத்தின் (19ம் பக்கம் பார்க்க)

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct: 416-624-7971 Office: 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence/ Galloway

**Scarborough** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals


### Finch & Pharmacy

**Scarborough** $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area


### Eglinton/Markham


**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated with Oversized Balcony

### Angeline St. N & Springdale

**Kawartha Lakes** $749,900
Bedrooms: 3 Washrooms: 2
Brand New, Walkout Basement

### Kennedy & Dougall Ave

**Caledon** $799,888
Bedrooms: 3 Washrooms: 3
Semi-Detached Home

### Queens Quay & Lower Sherbourne

**Toronto** $889,000
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

### Brisdale & Clockwork

**Brampton** $1,985,000
Bedrooms: 4 Washrooms: 4
Assignment Sale, Brand New Home

### Meadowvale / 401

**Scarborough** $1,899,999
Bedrooms: 4+3 Washrooms: 5
Stunning Top To Bottom Renovations

### Kipling Ave / Finch Ave


**Toronto** $549,900
Bedrooms: 2 Washrooms: 2
Location Location Location!!!

### Simcoe St & Winchester

**Oshawa** $549,999
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Layout, Large Windows

### Woodbridge Ave/ Clarence

**Vaughan** $799,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Low-Rise Boutique Style Building

### Eglinton Ave. W /Mavis

**Mississauga** $799,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Charming Townhouse In A Great Area

### Keele/Sheppard

**Toronto** $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property

### Mccowan & Ellesmere


**Scarborough** $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

### Martingrove/Rexdale


**Toronto** $2,900
Bedrooms: 3 Washrooms: 1
Renovated Main Floor Unit

### Markham & Sheppard


**Scarborough** $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தமிழின அழிப்புக் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் முயற்சிகளை கனடா ஆரம்பிக்க வேண்டுமென எதிர்கட்சித் தலைவர் வலியுறுத்து!




கனடிய எதிர்கட்சி தலைவர் சிறிலங்கா வின் தமிழின அழிப்பில் பங்கு கொண்ட இராணுவ அரசியல் தலை மைகளை உலக நீதிமன்றில் நிறுத்த வலியுறுத்தினார்

அண்மையில் கனடிய பாராளுமன்றில் கனடிய பாதுகாப்பு அமைச்சர் அனிதா ஆனந்த் மற்றும் பாராளுமன்ற உறுப்பி னர் ஹரி ஆனந்தசங்கரியின் ஒழுங்க மைப்பில் தமிழ் மரபுத்திங்கள் விழா வின் இறுதி நாள் நிகழ்வுகள் நடை பெற்றன. *Jan*30 2023 திங்கள் கிழமை நடந்த இந்த நிகழ்வில் கனடிய பிரதமர் உட்பட கனடாவின் எல்லா கட்சி தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி இருந்தனர். கனடிய தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கனடாவின் எல்லா பாகங்களிலும் இரு ந்து கலந்து கொண்டிருந்தனர்.

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசாங் கம் கட்டவிழ்த்து விட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கான நிரந்தர நீதியை பெற்றுக் கொடுக்கும் பாதை யில், பொறுப்புக்கூறல் மற்றும் சர்வ தேச நீதிக்கான அழுத்தத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் மனித உரிமை சார் குற்றவாளிகளாக அறியப்பட்ட இலங்கையின் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் இரு இராணுவ அதிகாரிகள் மீது சில தடை உத்தரவு களை அண்மையில் கனடா அரசாங் கம் விதித்திருந்தமையை இந்த நிகழ் வில் எல்லோரும் மெய்ச்சினர்.

கனடாவின் எதிர்க்கட்சி தலைவர் *Pierre Poilievre* தனது உரையில் சிறி லங்காவின் தமிழின அழிப்பில் ஈடுபட்ட குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றங் களான *ICC* (சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்) மற்றும் ஐஊது (சர்வதேச நீதிமன்றில்) காத்திரமான முறையில் கொண்டு செல்லும் முயற்சிகளை கனடா ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

தற்போதைய சிறிலங்கா அரச தலைவர் கள் மீதான தடை ஒரு சிறிய முன் செயலாகவும் எதிர்காலத்தில் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட அதிக அளவி லான இராணுவ மற்றும் அரசியல் தலைவர்களின் பெயர்களும் உள்ளடுக்க படவேண்டும் என்றும். அவர்கள் மீது பாரிய வழக்குகளை கொண்டு வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இப்படியான நீதியை தமிழர்களுக்கு பெற்று கொடுப்பதால் தான் எதிர்காலத் தில் மனித உரிமை பாதுகாக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

# இலங்கையில் அமைதிப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமையை பாதுகாப்பதில் முன்னிறுத்தி அமெரிக்கத் தூதுவர் செயற்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து!



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற் றாக இல்லாதொழிக்குமாறு இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோ கிப்பதன் ஊடாக அமைதியான முறை யில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை பாதுகாக்கப்படுவதற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டுமென இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்கிடம் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

வெளிநாடொன்றில் அமெரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜதந்திரி யான ஜூலிசங், சர்வதேச மனித உரிமை கள் சட்டத்தையும், அதற்குரிய நியம ங்களையும் பாதுகாக்கவும், மேம்படு த்தவும் வேண்டுமெனவும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.


இலங்கையில் அண்மைய காலங்களில் அமைதியான முறையில் முன்னெடுக் கப்படும் போராட்டங்கள் மீது அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டு வருவ துடன், போராட்ட ஒருங்கிணைப்பாளர் கள் மற்றும் போராட்டங்களில் பங்கேற் பவர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளிட்ட மிகமோச மான சட்டங்கள் பிரயோகிக்கப்படு கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்கிடம் மேற்குறிப்பிட்டவாறான கோரிக்கையொன்றை முன்வைத்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, இலங்கை யில் அமைதியான முறையில் போராட் டங்களில் ஈடுபடுவதற்கான உரிமையை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் வேண்டுமென தூதுவர் ஜூலி சங்கிடம் வலியுறுத்தி டுவீட் ஒன்றைப் பதி வேற்றம் செய்யுமாறும் பொதுமக்களி டம் மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அமைதியான முறையில் முன்னெடுக் கப்படும் போராட்டங்கள் இலங்கை அரசாங்கத்தினால் மிகமோசமாக அடக்கப்படுவதையும், எதிர்ப்புக்குரல் களை ஒடுக்குவதற்கான ஆயுதமாக மாற்றப்பட்டிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதையும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பார்த்திருக்கின்றார்.

அது மாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டமானது மனித உரிமை கள் தொடர்பான சர்வதேச நியமங் களுக்கு எதிரானதாகக் காணப்படுவ தாகவும், தமது கருத்துக்களை வெளி ப்படுத்துவதற்கான மக்களின் சுதந்திர த்தை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் பகிரங்க மாகவே கூறியிருக்கின்றார்' என்று சர்வ தேச மன்னிப்புச்சபை தெரிவித்துள் ளது.

மேலும் உயர்மட்ட இராஜதந்திரி மற்றும் பிறிதொரு நாட்டில் அமெ ரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத்து பவர் என்ற ரீதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக இல்லா தொழிக்குமாறும் இலங்கை அரசாங்க த்திற்கு அழுத்தம் பிரயோகிப்பதன் ஊடாகவும் போராட்டங்கள் மற்றும் கருத்துவெளிப்பாட்டுச்சுதந்திரத்தை இலக்குவைத்து எந்தவொரு சட்ட மும் பிரயோகிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலமும் இலங் கையில் போராட்டங்களில் ஈடுபடு வதற்கான உரிமை பாதுகாக்கப்படுவ துடன் அதற்கு மதிப்பளிக்கப்படுகின்ற சூ மூல் கட்டியெழுப்பப்படுவதை முன் னிறுத்தி தூதுவர் ஜூலி சங் செயற்பட வேண்டுமெனவும் மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்,
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
**416 755 5544**


# காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென இந்திய தரப்பினர் உளறக் கூடாது! - எச்சரிக்கும் சரத்வீரசேகர





வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட வேண்டும், அது தமிழர் தாயகம் என மறைமுகமாக தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்த கருத்தை ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர வன்மையாக கண்டித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கம் போர்க்கொடி தூக்கக்கூடாது என்பதற்காகவே வடக்கும், கிழக்கும் முழுவதுமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கைகளிலேயே உள்ளது எனும் அண்ணாமலையின் விசமத்தனமான கருத்துக்களை நாம் கண்டிக்கின்றோம்.

அண்ணாமலை கூறுவது போல் 13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வாக அமையாது. ஏனெனில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் உளறுவதை இந்தியத் தரப்பினர் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். இது 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நேரம் அல்ல. 13ஆவது திருத்தத்தை நாடாளுமன்றம் ஊடாக முழுமையாக இல்லாதொழிப்பதற்கான நேரமே கணிந்துள்ளது.

இலங்கையில் 13க்கு எதிராக பிக்குகள் கூட வீதியில் இறங்கியுள்ளமை அண்ணாமலைக்குத் தெரியவில்லையா? இது பௌத்த நாடு என்பதை அவர் மறந்துவிட்டாரா என கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் என்பது சட்டவிரோதமான சட்டம் அல்ல, இதை பௌத்த பிக்குகள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில், ஜே.ஆர்.ஜயவர்தனவும் ராஜீவ் காந்தியும் இணைந்து உருவாக்கியது தான் இந்த 13ஆவது திருத்தச் சட்டமும், அதன் அடிப்படையிலான மாகாணசபை முறைமையும்.

இதில் பிரச்சினை என்னவென்றால் காணி - பொலிஸ் அதிகாரம் தான். இது சம்பந்தமாகப் பெரும்பான்மையான மக்கள் சந்தேகத்துடன் பார்ப்பதுதான் இந்தப் பிரச்சினைக்கு காரணம். காணி பொலிஸ் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால் இப்படி இப்படியான ஆபத்துக்கள் ஏற்படும் என்று தெற்கு மக்களுடன் சேர்ந்து பௌத்த பிக்குகளும் நினைக்கின்றனர்.எனவே, நாடு பொருளாதார பிரச்சினையை எதிர் கொண்டிருக்கும் நிலையில் இந்த 13ஆவது திருத்தம் பற்றிப் பேச வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது.

மக்கள் மூன்று வேளையும் உண்ண முடியாத நிலையில் உள்ளனர். இதனால் 13 பற்றிப் பின்னர் பேசலாம் என்பதே எமது நிலைப்பாடு. அதற்கு முன் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.


## வடக்கு கிழக்கு தேர்தல்களின் பா.ஜ.கட்சி போட்டியிடுமாம் - விமல் வீரவன்ச உளறல்



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களின் போது மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி போட்டியிட்டாலும் நாம் அதிர்ச்சியடையத் தேவையில்லை என்ற நிலையையே தற்போது காணப்படுகின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிம் அவர் மேலும் கூறுகையில், வடக்கையும், கிழக்கையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கைகளிலே இலங்கை அரசாங்கம் எப்போது தாரை வார்த்தது? வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தலைவராக மோடி எப்போது பிரகடனப் படுத்தப்பட்டார்? அண்ணாமலையின் கருத்துக்கள் ஊடாக எம்மிடம் எழுந்துள்ள இந்த கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்க வேண்டும். அண்ணாமலை அண்மையில் இலங்கை வந்து தமிழகம் திரும்பிய பின்னர் சர்ச்சைக்குரிய இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இதன் பின்புலம் தொடர்பில் நாம் தீவிரமாக ஆராய வேண்டும்.

இந்தியாவில் உள்ள ஒரு தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் (20ம் பக்கம் பார்க்க)

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

04 மார்ச் 2023 சனிகிக்கிழமை:- சனிப்பிரதோஷ விரதம்

06 மார்ச் 2023 திங்கள் கிழமை- பௌர்ணமி விரதம் பூஜை
உபயம்: அழகேசன் குடும்பம்

06 மார்ச் 2023 திங்கள் கிழமை- மாசிமகம் விரதம் பூஜை
உபயம்: பா. உதயகுமார்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# அண்ணாமலையின் கருத்துக்கு கஜேந்திரகுமாரும் கண்டனம்!

அண்ணாமலை ஈழத்திற்கு விஜயம் செய்த பின்னர் நாடு திரும்பி, ஈழத் தமிழர்களுடைய பிரச்சினைக்கு 13வது திருத்தம் தான் தீர்வு என்றும், இங்குள்ள மக்கள் அதைத் தான் வலியுறுத்தியுள்ளார்கள் என கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவருடைய இந்த கருத்தை நாங்கள் நிராகரிப்பது மட்டுமல்லாது அதனை வன்மையாக கண்டிக்கிறோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தமிழ் மக்கள் கடந்த 87ம் ஆண்டு, இந்த 13வது சீர்திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதாக கூறி அதனை நிராகரித்து வந்துள்ளார்கள். 13வது சீர்திருத்தம் தான் தீர்வு எனக்கூறி இந்திய நாட்டின் பொம்மைகள், எடுபிடிகள் அல்லது கூலிகள் இங்கு அரசியலில் செயற்பட்டுக் கொண்டு இருந்தும்கூட அவர்கள் இங்கு தேர்தல் கேட்டு வாக்குப் பெற முடியாத சூழ்நிலை தான் இங்கு உள்ளது.

13வது சீர்திருத்தத்தை நியாயப்படுத்துவதற்காக அது தீர்வல்ல, இருக்கிறதை தான் கேட்கிறோம், எமக்கு தேவையானது சமஷ்டி, சுயநிர்ணயம் போன்ற விடயங்களை கூறித் தான் தமிழ் மக்கள் மத்தியில் அதனை திணிக்க பார்க்கின்றனர்.

இந்தியாவில் இருந்து வந்தவர்கள் இங்கு வந்து தமது முகவர்களைத்தான் சந்தித்தார்களே தவிர பொதுமக்களை சந்திக்கவில்லை. தாங்களே 13ஐ அமுல்படுத்துமாறு கூறி விட்டு வந்து, இங்கு இருக்கின்ற முகவர்கள் அதனை கதைக்கும் போது ஏதோ ஈழத்தமிழர்கள் அதனை ஏற்றுக்கொள்வதாக கூறுவது பொருத்தமற்ற கருத்து.

நாங்கள் பாதிக்கப்பட்ட, இன் அழிப்புக்குள்ளான ஒரு இனம். போருக்கு பின்னர் தொடர்ச்சியாக இன் அழிப்புக்கு உட்பட்டுள்ள ஒரு இனம். இவை அனைத்திற்கும் காரணம் இந்த ஒற்றையாட்சிக்குள் உள்ள கட்டமைப்புகள். 13வது சீர்திருத்தம் ஒரு துளியளவு கூட தமிழ் மக்களை பாதுகாக்கவில்லை இந்நிலையில் அதனை ஏற்றுக்கொள்ள போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.கலாச்சார மண்டபத்தை யாழ்.மாநகரசபையிடமே ஒப்படைக்க வேண்டும்! இந்துமக்கள் கட்சித் தலைவர் அர்ஜீன்சம்பத்

யாழ்ப்பாண மத்திய கலாசார நிலையத்தை யாழ் மாநகர சபையிடமே கையளிக்க வேண்டும் என தெரிவித்த இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜூன் சம்பத் அதற்கான அழுத்தங்களை இந்திய அரசாங்கத்திற்கு வழங்குவோம் என்றார். சீனா கட்டிக் கொடுத்த கலாசார மையத்தை தன் கட்டுப்பாட்டிலே வைத்திருக்கின்றது. மாறாக இந்திய அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட கலாசார மண்டபமானது இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த கலாசார மண்டபத்தை யாழ். மாநகர சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான கலாசார ரீதியான உறவுகளை மேம்படுத்த முடியும்.

திருக்கேதீச்சரத்தில் தோரணவாயில் அமைக்கப்பட வேண்டும். திருக்கோணேச்சரம் இராவண வரலாறு போன்றன மீளக் கட்டமைக்கப்பட வேண்டும். திருகோணேச்சர ஆலயம் தொடர்பாகவும் அங்கு தொல்லியல் திணைக்களத்தினரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் நாங்கள் இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வோம்.

இதேபோல் இலங்கையில் சிவசேனையானது, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. மத மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளு




க்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றது. பசு வதை சட்டத்தை கொண்டுவர சிவசேனை அமைப்பின் பங்களிப்பு அளப்பெரியதாகக் காணப்பட்டது. மறவன் புலவு சச்சிதானந்தம் ஐயாவின் பணிகளுக்கும் சிவசேனையின் பணிகளுக்கும் என்றென்றும் தோளோடு தோள் கொடுப்போம்.

ஈழத் தமிழர்களுக்காக இந்தியா தொடர்ந்தும் குரல் கொடுக்கவும், செயற்படவும் தயாராக இருக்கின்ற நிலையில், 13ஆம் திருத்தம் தொடர்பில் சிலர் அறியாமல் பேசுகின்றனர். 13ஆம் திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஐ.எம்.எவ். கடன் விவகாரத்தில் இலங்கையைக் கைவிடும் சீனா! ஜனாதிபதியின் அழைப்பை ஏற்கவும் மறுப்பு!

சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனா தொடர்ந்தும் கைவிரித்து வருகிறது. இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைபேசி அழைப்புக்குக் கூட சீனத் தலைவர் பதிலளிக்காது தவிர்த்து வருகிறார் என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் மிகவும் முக்கியமான கட்டத்தில் தற்போதுள்ளன. இரு வாரங்களுக்கு முன்னர், சீனாவின் எக்சிம் வங்கி இலங்கையின் கடனை இரு வருடங்களுக்கு மறுசீரமைக்க இணக்கம் தெரிவித்து ஐ.எம். எவ்வுக்கு கடிதம் அனுப்பியது.

இந்த நிலையில், சீனாவிடம் இருந்து இலங்கைக்கு கடன் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். ஆனால், ஐ. எம். எவ்வின் கடிதத்துக்கு சீனா இதுவரை பதிலளிக்கவில்லை. இது தொடர்பில் சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்குடன் பேசுவதற்காக கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஆனால், அவரின் அழைப்புக்கு சீன ஜனாதிபதி தொடர்புக்கு வர மறுத்துவிட்டார்.

வேறு வழிகளில் முயன்றும் சீன ஜனாதிபதியை ரணில் விக்கிரமசிங்கவால் தொடர்பு கொள்ள முடியவில்லை. இந்த நிலையில், இலங்கைக்கு தற்போது ஐ. எம். எவ்வின் கடன் கிடைக்காமல் போவதற்கான சந்தர்ப்பம் எழுந்துள்ளது.

அடுத்த மாதத்துக்குள் இலங்கைக்கு ஐ. எம். எவ்வின் கடன் தொடர்பில் நல்ல பதில் கிடைக்கும் என்றும் மார்ச் மாதம் கடன் கிடைக்கும் எனவும் கூறப்பட்டு வரும் நிலையில், சீனாவின் பதில் இல்லாமலேயே இலங்கைக்கு கடனுதவி வழங்குவதற்கு ஒப்புதல் வழங்குவதற்கான பிரேரணையை நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையில் சமர்ப்பிக்க அரசாங்கம் தற்போது தீர்மானித்துள்ளது.

இதில், அனுமதி கிடைக்காத பட்சத்தில், மறுசீரமைக்கும் சீனாவின்கடிதம் இல்லாமல் ஐ. எம்.எவ்வுடனான பேச்சுகளை தொடரும் நிலை இலங்கைக்கு ஏற்படும். ஆனால், சீனாவிடம் இருந்து தேவையான கடிதம் இல்லாமல் பேச்சைத் தொடர ஐ. எம். எவ். தயாரா என்பது சந்தேகமே.

இலங்கையின் மிகப் பெரிய கடன் வழங்குநராக சீனா இருப்பதால், அவர்களின் கடன் மறுசீரமைப்பு அத்தியாவசியமானது. ஏனைய நாடுகளைப் போன்று சீனாவும் இலங்கைக்கு சமமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று ஐ. எம். எவ். பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளது. இதன்படி, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய நிதி தொடர்பாக புதிய நெருக்கடியை அரசாங்கம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# முன்னணியிடமுள்ள மாற்று வழியென்ன?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக அடையாளப்படுத்தப்படும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவ்வப்போது சர்வதேச அரசியல் பற்றிப் பேசிக் கொள்ளும் ஒருவர்.



குறிப்பாக, இந்தியா தொடர்பில் அவ்வப்போது புரிந்தோ புரியாமலோ பேசி வரும் ஒருவர். தங்களை தவிர, ஏனையவர்கள் அனைவர் மீதும் குற்றச்சாட்டு க்களை முன் வைப்பதிலும் குறிப்பாக மற்றவர்களை இந்தியாவின் கைக்கூலிகள், முகவர்களென்று கூறுவ ஷதிலும் அலாதிப் பிரியமுள்ள ஒருவர்.

அவர் இப்போது, இலங்கையில் பாரிய விடயங்கள் மிகவும் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறுகின்றார். அந்த விடயங்கள் என்னவென்று அவர் கூறவில்லை.

மக்களுக்கு உண்மைகளை கூறுபவர்களே நேர்மையான அரசியல்வாதிகள். ஒருவேளை, நாட்டில் இடம் பெறும் பாரிய விடயங்கள் தொடர்பில் கஜேந்திரகுமாருக்கு தெரிந்தால், அதனை அவர் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். தனது அரசியல் நேர்மையை வெளிப்படுத்த வேண்டும்.

அண்மையில், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியின் கீழ், இரண்டு விமானங்களில் அமெரிக்க பாதுகாப்பு குழுவொன்று கொழும்புக்கு விஜயம் செய்திருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டே பாரிய விடயங்கள் இரகசியமாக இடம் பெறுகின்றன என்று பொன்னம்பலம் கூற முயற்சிக்கின்றார். இவ்வாறான கதைகளை தென்னிலங்கையிலுள்ள சில சிங்கள அடிப்படைவாதிகளும் கூறி வருகின்றனர்.

ஒரு நாட்டில், இவ்வாறான உத்தியோகபூர்வமான விஜயங்கள் இடம் பெறுகின்றமை சாதாரணமான ஒன்றாகும். ஒருவேளை அமெரிக்கா இரகசியமான விடயங்களை முன்னெடுக்க முயற்சிக்குமாயின், அவற்றை, இவ்வாறான வெளிப்படையான நகர்வுகளின் மூலம் மேற்கொள்ள வேண்டியதில்லை.

அமெரிக்கா போன்ற ஓர் உலகசக்திக்கு விடயங்களை கையாளுவதற்கு பல வழிகளுண்டு.

இலங்கையின் மூலோபாய முக்கியத்துவம் முன்னரை விடவும் அதிக கவனத்தை பெற்றிருக்கின்றது என்பது உண்மை தான். அதனை மறுப்பதற்கில்லை.

இந்தப் பின்புலத்தில், அமெரிக்க இந்திய நகர்வுகளிலிருந்து இலங்கை தப்பிக்கவே முடியாது. உண்மையில், வெளித்தரப்புகளின் பிடியிலிருந்து சிங்களவர்களும் தப்ப முடியாது அதேவேளை தமிழர்களும் தப்ப முடியாது.

ஒரு வேளை, இந்த யதார்த்தத்தை மறுதலிக்க பொன்னம்பலம் போன்றவர்கள் விரும்பினால், அதற்கான மாற்று வழிமுறைகளை கூறவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதற்கு பதிலாக, எங்களுக்கு வாக்களித்தால் நிலைமைகளை மாற்றியமைப்போமென்னும் பலவீனமான உண்மைக்கு புறம்பான கதைகள் மூலம் இந்த அரசியலை ஒரு போதுமே எதிர்கொள்ள முடியாது.

முதலில் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியம் பேசுவதில் தங்களுக்குள் முட்டிமோதிக்கொள்ளும், கட்சிகளால் இந்திய மற்றும் அமெரிக்க நகர்வுகளில் ஒரு போதுமே குறுக்கீடு செய்ய முடியாது.

இலங்கை அரசாங்கத்தினாலேயே எதுவும் முடியாத போது, ஒரு சில பாராளுமன்ற ஆசனங்களை மட்டுமே வைத்திருக்கும் அகில இலங்கை காங்கிரஸ் போன்றதொரு கட்சியால் என்ன செய்துவிட முடியும்? இலங்கைத்தீவில் இந்தியா மற்றும் அமெரிக்காவின் தலையீடுகள் தவிர்க்கவே முடியாதவை.

இதனை ஆழமாகப் புரிந்து கொண்டால், இவற்றைத் தமிழர்கள் தங்களுக்கான வாய்ப்பாகவே நோக்க வேண்டும்.

மாறாக, பாரிய விடயங்கள் இரகசியமாக நடைபெறுகின்றன எனக் கூறி மக்களை அச்சுறுதவதால் எவ்வித பயனுமில்லை.

அமெரிக்கா இரகசியமாக விடயங்களை நகர்த்துவதை எதிர்க்க விரும்பினால், அதன் பொருள் என்ன? சீனாவை ஆதரிப்பதா?

# மாபெரும் வரலாற்றுத் தலைவரை ஏன் இப்படி இழிவுபடுத்துகின்றீர்கள்? பழ.நெடுமாறனிடம் அருட்தந்தை ஜெகத் கஸ்பார் வேதனையோடு கேள்வி!





இறையாண்மை அற்று அநாதைகாளக இருந்த தமிழினத்தை இறையாண்மையை கொண்டு வரக்கூடிய அளவிற்கு இழுத்து வந்த மாபெரும் வரலாற்று தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை இந்த அளவிற்கு இழிவுபடுத்துகின்ற செயலை ஐயா நெடுமாறன் அவர்கள் செய்திருக்க கூடாது இவ்வாறு வேதனையுடன் தெரிவித்துள்ளார் அருட்பணி ஜெகத் கஸ்பார் அடிகளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனது மனைவி மற்றும் மகள், மகன் என அனைவரையும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான சகல வசதி வாய்ப்புகள் இருந்தும் அதனை மறுத்து அவர்களை மக்களோடு மக்களாக நிற்க வைத்த மாபெரும் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்.

அதனை விட அவரது சகோதரர்கள் எவருமே விடுதலைப்புலிகளின் கட்டளை அமைப்பில் எந்தப் பிரிவிலும் வராதவர்கள். எனவே இப்படி கட்டளை பிரிவில் எதிலும் வராத அவர்களது சகோதரர்களை நம்பி அவர் தப்பிச் சென்றார் அவர்களது பாதுகாப்பில் இருக்கிறார் அவரைப்பற்றி அவர்கள் அதிகாரபூர்வமாக பேசக்கூடிய அளவிற்கு அவர் தன்னை ஆக்கி கொண்டார் என்று சொல்வதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்த மாபெரும் தலைவனுக்கு என்னளவில் ராஜேந்திர சோழனுக்கு பிறகு, சேரன் செங்குட்டுவனுக்கு பிறகு, சுந்தரபாண்டியனுக்கு பிறகு,12 ஆம் நூற்றாண்டு பகுதியில் தமிழர்கள் இழந்து விட்ட இறையாண்மையை கடந்த எட்டு நூறு ஆண்டுகளாக இல்லாதிருந்த இறையாண்மை அநாதைகளான தமிழர்களான நாம். எமக்கென்று இறையாண்மை இல்லை. அவர்களுக்கு இறையாண்மையை பெற்றுக் கொடுக்க போராடியவர் தான் தலைவர் பிரபாகரன்.

ஓரிரு இலட்சம் மக்களை எண்ணிக்கையில் கொண்டிருக்கின்ற இனங்கள் கூட இறையாண்மை கொண்ட தேசங்களை கொண்டிருக்கின்ற போது ஆயிரம் இலட்சம் உயிர்களை கொண்டிருந்தும் இறையாண்மை இல்லாத இனம் தமிழ் இனம். அந்த இனத்திற்கு ஏறக்குறைய இறையாண்மையை கொண்டு வரக்கூடிய அளவிற்கு இழுத்து வந்த மாபெரும் வரலாற்று தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்.அவரை இந்த அளவிற்கு இழிவுபடுத்துகின்ற செயலை ஐயா நெடுமாறன் அவர்கள் செய்திருக்க கூடாது. எனவும் ஜெகத் கஸ்பார் அடிகளார். மேலும் தெரிவித்துள்ளார்.


**ANALAITIVU IYANAR TEMPLE OF CANADA**

**கனடிய அனலைதீவு ஐயனார் ஆலயம்**

*13-22 Goodmark Place- Etobicoke- ON M9W 6R2*
*Tel: 416 679 9899*

கனடிய அனலைதீவு ஐயனார்
ஆலய அங்கத்தவர்களுக்கான
பொதுக்கூட்ட அறிவித்தல்
திகதி:-**Sunday March 5, 2023**
நேரம்:-**1:00 Pm**
இடம்:- ஆலய மண்டபம்
அங்கத்தவர்கள் அனைவரும்
கலந்து கொள்ளுமாறு
அன்புடன் வேண்டுகின்றோம்.
நன்றி -ஆலய அறங்காவல் சபையினர்



**தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்**

**Math & Physics Tutoring**
**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

**Instructor: S. Elancheliyan,** B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
**சி.இளஞ்செழியன்**
**Tel: 416-524-0424**

# அம்பாறை திருமலையில் தமிழருக்கு நேர்ந்தது முல்லைத்தீவிலும் நிகழும் - சட்டத்தரணி தவராஜா சீற்றம்!

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழர் வெற்றிபெற முடியாத நிலை உருவானது. தற்போது, தராசு சின்னத்தில் போட்டியிடும் முஸ்லிம் கட்சிக்கு வாக்களிக்குமாறு ஊக்குவிப்பதன் மூலம் சுமந்திரன் முல்லைத்தீவில் அதேபோன்ற விடயத்தை அரங்கேற்றுகிறார். இவ்வாறு பகிரங்கமாக சாட்டியுள்ளார் இலங்கை தமிழரசு கட்சியின் கொழும்பு கிளை தலைவரும் சட்டத்தரணியுமான கே. வி. தவராசா.

யாழ்ப்பாணத்தில் 21 பெப் 2023 அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டினார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தமிழரசு கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து, தமிழரசு கட்சி அந்தப் பிரதேச சபையில் ஐக்கிய தேசிய கூட்டமைப்பு என்ற கட்சியின் தராசு சின்னத்தில் போட்டியிடும் என்று தெரிவிக்கப்பட்டது. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீமின் ஆதரவில் இந்தக் கட்சி இயங்குவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் இந்தக் கட்சியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் ரவுப் ஹக்கீம், சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இது தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

அரசியல் சம்பந்தமாக முடிவு ஒன்று எடுப்பதானால் அல்லது ஒப்பந்தம் செய்வதானால் நிச்சயமாக அரசியல் குழு கூடி முடிவு எடுத்தால் தான் அது சரியானதாக இருக்கும். நானும் கேள்விப்பட்டேன். கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட பின்னர் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்





ஆதரவு பெற்ற ஐக்கியதேசிய கூட்டமைப்பு என்ற சுயேச்சை குழுவுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக அறிந்தேன்.

யார் யாருடன் ஒப்பந்தம் செய்வது என்பது இல்லையா? சுமந்திரன் ஹக்கீமுடன் ஒப்பந்தம் செய்கிறார் செய்திருந்தால் எனக்கு தெரியாது. தமிழரசு கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் என்ற ரீதியில் 13 ஆண்டுகள் நான் இந்த கட்சியில் இருக்கிறேன் எனக்கு தெரியாது. எனக்கு மட்டுமல்ல அரசியல் குழுவிலுள்ள யாருக்கும் தெரியாது. இது சுமந்திரனின் சொந்த நிறுவனம் – சொந்தவீடு போன்று நடந்து கொண்டிருக்கிறது. யாரோடு போய் ஒப்பந்தம் செய்கிறார். தலைமைத்துவத்துக்கு தெரியாது. அதுவும் எங்கே போய் ஒப்பந்தம் செய்கிறார்? இதைத் தான் கவனிக்க வேண்டும்.

முல்லைத்தீவு என்பதும ஒப்பாரும் மிக்காரும் இல்லாத எங்களின் தலைவன் யுத்தம் செய்த இடம். இங்கு போர் முடிந்த பின்னர் 2009இல் நீராவிப்பிட்டி என்ற இடத்தில் தமிழரின் பூர்வீக சொத்தான காடுகளை அழித்து ரிஷாத்பதியுதீன் முஸ்லிம்களை குடியேற்றினார். அங்கு இப்போது பெருவாரியாக முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்.

இப்போது, முஸ்லிம்கள் தராசு சின்னத்தில் வாக்கு கேட்கும்போது நாம் அவர்களுக்கு புத்துணர்வூட்டுகிறோம். முஸ்லிம் மக்களுடன் எமக்கு பிரச்னையில்லை. ரிஷாத் இடத்தை பிடித்துக் கொடுத்தார் இப்போது ஹக்கீமும் சுமந்திரனும் ஒப்பந்தம் செய்கிறாராம். இறுதியாக என்ன நடக்கும் என்றால்,

உங்களுக்கு தெரியும் அம்பாறைக்கு திருகோணமலைக்கு என்ன நடந்தது என்று. திருகோணமலையை சீரழித்து விட்டார் சம்பந்தன் அவர்கள். அங்கு, இனி எவரும் (தமிழர்) வெற்றிபெற முடியாது. யார் வருவார்கள் எந்த இனத்தை சேர்ந்தவர்கள் வருவார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இப்போது, அதே விடயத்தை சுமந்திரன் முல்லைத்தீவில் அரங்கேற்றுகிறார்.

அவர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) பாரம் கொடுக்க இதை அரங்கேற்றுகிறார். நாம் முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்களல்ல. ஆனால், யாராக இருந்தாலும் எமது காணி நிலம் பறிபோவதை நாம் அனுமதிக்க முடியாது என்றார்.

# விடுவிக்கப்பட்ட காணிகளை உரிமையாளர்கள் கையேற்பதில் தயக்கம் காட்டுகின்றார்கள் என்கிறார் யாழ். அரசஅதிபர்

வலி வடக்கில் இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளை உரிமையாளர்கள் கையேற்பதில் தயக்கம் காட்டுவதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.



மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில வாரங்களுக்கு முன்பு தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட காங்கேசன் துறையில் இராணுவத்தினிடமிருந்தும் கடற்படையினரிடமிருந்தும் 108 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கான முயற்சிகள் நீண்ட காலமாக இடம் பெற்றாலும் சிறிது சிறிதாக காணிகள் விடுவிக்கப்படுகின்ற போதிலும் ஒரு இடர்பாடு காணப்படுகின்றது.

முகாம்களில் இருக்கின்றவர்களை நாங்கள் விடுவிக்கப்பட்ட இடங்களில் குடியேற்றக் கூடியவாறு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளோம்.

விடுவிக்கப்பட்ட இடங்களில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் தங்களுடைய காணிகளை முழுமையாக கையேற்று அதனை உரிய பாவனைக்கு உட்படுத்தினால் மாத்திரமே தொடர்ச்சியாக காணிகளை விடுவிப்பதற்கு உதவியாக இருக்கும்.

விடுவிக்கப்பட்ட காணிகளில் இராணுவத்தினர் இருந்து வெளியேறிய பின்னர் அந்த கட்டிடங்களை அவர்கள் விட்டுச் சென்றுள்ளார்கள் எனவே காணி உரிமையாளர்கள் தமது காணிகளை கையேற்கத்தவறுவதால் அந்த கட்டிட பொருட்களை சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்கின்ற நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே விடுவிக்கப்பட்ட இடங்களில் மக்கள் தங்களுடைய சொந்த காணிகளை கையேற்பதன் மூலமே நாங்கள் மேலதிகமாக படையினரிடம் உள்ள காணிகளை விடுவிப்பதற்குரிய நட வடிக்கைகளை முன்னெடுக்க முடியும் விடுவிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் தமது காணிகளை பொறுப்பேற்பதற்கு முன்வர வேண்டும் என்றார்.

# 21 தமிழ்அரசியல் கைதிகள் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை

விடுதலை புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 2014 ஆம் ஆண்டு வடமாகாணத்திலும் கொழும்பிலும் கைது செய்யப்பட்ட 21 தமிழ் அரசியல் கைதிகள் 21 பெப் 2023 கொழும்பு மேலதிக நீதவான் நீதி மன்றத்தினால் எதுவித குற்றசாட்டுகளும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளனர்

குறித்த 21 சந்தேக நபர்களின் வழக்கு விசாரணையும் செவ்வாய்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் மற்றும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜ் ஆஜராகியிருந்தனர்

குறித்த 21 நபர்களும் 2014 ஆண்டு பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு வவுனியா,கிளிநொச்சி, பூசா ஆகிய பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் முகாம்களில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் சில மாதங்கள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டிருந்தனர்

இந்த நிலையில் சிறைகைதிகள் சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்ட நிலையில் அவர்களின் உறவினர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் நாடளாவிய ரீதியில் பல சாத்வீக போரட்டம் மேற்கொண்டதன் காரணமாக 2015,2016 ஆண்டு பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் குறித்த 21 நபர்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்

இந்த நிலையில் குறித்த நபர்களின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் விசாரனைகளின் பின்னர் 21 நபர்களும் குற்றசாட்டுக்கள் எதுவும் இன்றி அனைத்து வழக்குகளிலும் இருந்து எந்த வித நிபந்தனைகளும் இன்றி கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்

# இலங்கை புலனாய்வுப் பிரிவு அலுவலகத்திற்குள் நுழைந்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள்!

இலங்கையின் புலனாய்வுத்தரவுகள் அனைத்தும் அமெரிக்கப் புலனாய்வு மையத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்தே முடிவுகள் எடுக்கப்படும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் வைத்து 22.02.2023 கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் கூறுகையில், இலங்கைக்கு அண்மையில் பயணம் செய்த அமெரிக்காவின் பாதுகாப்பு அதிகாரிகள், புலனாய்வுப்பிரிவு அலுவலகத்தில் இருந்தவர்களின் ஆயுதங்களை களைந்த பின், ஆயுதங்களுடன் அலுவலகத்துக்குள் பிரவேசித்துள்ளனர்.

இதன்மூலம் இலங்கையின் புலனாய்வுத் தரவுகள் அனைத்தும் அமெரிக்கப் புலனாய்வு மையத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்தே முடிவுகள் எடுக்கப்படும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. முன்னதாக 2001ஆம் ஆண்டு இவ்வாறான நிலைமை தோற்றுவிக்கப்பட்ட போதும் அது பின்னர் 2004ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது.

அமெரிக்காவின் பாதுகாப்பு திணைக்களத்தின் இந்து பசுபிக் பாதுகாப்பு துணை உதவிச்செயலாளர் ஜெடிடியா ரோயல் தலைமையில் இலங்கைக்கு வந்தவர்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் இலங்கைக்கான பயண நோக்கம் என்ன? ஜனாதிபதியுடனும், பாதுகாப்பு செயலாளருடன் அவர்கள் என்ன பேசினார்கள் என்ற விடயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

# கனடா அமெரிக்கா போன்று பின்லாந்து அரசும் இலங்கை போர் குற்றவாளிகளுக்கு தடை விதிக்குமா? எம்.பி.கேள்வி!



இலங்கையின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக கனடா மற்றும் அமெரிக்காவைப் போன்று தமது நாடு தடைகளை விதிக்குமா? என்று பின்லாந்து அரசாங்கத்திடம் அந்நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் ஹசைன் அல்-ரயீ கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பான கேள்விகளை பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர் ஹசைன் அல்-ரயீ அந்நாட்டு அரசாங்கத்திடம் எழுத்துமூலம் சமர்ப்பித்துள்ளார். அது மாத்திரமன்றி இலங்கை அரசாங்கத்தினால் தமிழ்மக்களுக்கு எதிராகத் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இனப்படுகொலை குறித்தும் அவர் அந்த எழுத்து மூல ஆவணத்தில் உள்ளடக்கியுள்ளார்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலை உறுதி செய்யுமாறு சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதிலும், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான மிகக்குறைந்தளவிலான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கரிசனை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் இலங்கையின் போர்க் குற்றவாளிகளுக்கு எதிராகப் பின்லாந்திலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் தடைகள் விதிக்கப்படுவதற்கு அவசியமான அழுத்தத்தை வழங்கியமைக்காக பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர் ஹசைன் அல்-ரயீக்கு நன்றி தெரிவித்திருக்கும் தமிழீழ சர்வதேச இராஜதந்திரப் பேரவை, போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக ஏனைய சர்வதேச நாடுகளும் தடைகளை விதிக்க முன் வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

## பயங்கரவாதத் தடைச்சட்டம் காரணமாக இலங்கை ஜிஎஸ்பி வரிச்சலுகையை இழக்கும் ஆபத்து



பயங்கரவாத தடைச்சட்டம் காரணமாக இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகையை இழக்கும் ஆபத்தை எதிர் கொள்கின்றது என இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் தெரிவித்துள்ளார் பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றாததன் காரணமாக இலங்கை ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை இழக்கும் ஆபத்தை எதிர் கொள்கின்றது என இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் ஹோல்கெர் சியுபேர்ட் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வ. தேச தராதரத்திற்கு ஏற்ப மாற்றுவோம் என இலங்கை பல தடவை ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஜேர்மனிக்கும் வாக்குறுதியளித்துள்ளது என தெரிவித்துள்ள அவர் ஜிஎஸ்பி வரிச்சலுகையின் இந்த கட்டம் முடிவிற்கு வருகின்றது இதன் காரணமாக இலங்கை அதனை இழக்கும் ஆபத்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தருணத்தில் இலங்கையால் அதனை இழக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ரஷ்யாவுக்கு எதிரான ஐநா தீர்மானத்துக்கு இலங்கை ஆதரவளிக்க வேணடும் என ஜெர்மனி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனான சந்திப்பின் போது இந்த விவகாரம் குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள ஜெர்மனியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் ரம்சோர் தெரிவித்துள்ளார். ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை இலங்கை கடந்த வருடம் தவிர்த்தமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளைசீனாவின் கடன் மறுசீரமைப்பு ஆதரவு உத்தரவாதம் இல்லாமலே இலங்கைக்கான கடனை அனுமதிப்பது குறித்து சர்வதேச நாணய நிதியம் பரிசீலித்து வருவதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுளளது. இலங்கைக்கான நிதியுதவியை வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியம், அதன் கடன் கொடுனர்களில் இருந்து மறுசீரமைப்புக்களை எதிர்பார்த்திருந்தது. எனினும் இந்தியா ஜப்பான் மற்றும் தனியார் பிணையாளிகள் கூட 10 வருட கடன் ரத்து மற்றும் 15 வருட கடன் (20ம் பக்கம் பார்க்க)


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# சலசலப்பை ஏற்படுத்தியுள்ள அண்ணாமலையின் யாழ்ப்பாண உரை!

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக
யாழ்ப்பாணத்தில் இருந்து
– பார்த்தீபன் –

தென்னிந்திய தமிழ்த் தேசியவாதிகளுக்கு எதிராக வழமையாக போரைத் தொடுக்கும் சிங்கள இனவாதிகள் இப்போது தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலைக்கு எதிராக தாக்குதல் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். இதனால், இலங்கை அரசியலில் அண்ணாமலை பேசுபொருளாகியிருக்கின்றார் அண்ணாமலை இலங்கை அரசியலில் மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தியிருப்பதற்கு காரணம் யாழ்ப்பாணத்தில் அவர் நிகழ்த்திய உரைகள் தான்.


யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுள்ள கலாசார நிலயத்தின் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காகவே அவர் இலங்கை வந்திருந்தார். இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் அமைக்கப்பட்ட இந்த நிலையம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்திய மத்திய அமைச்சர் எல். முருகனுடன் அண்ணாமலை வந்திருந்த போதிலும், அதிகளவுக்கு சச்சையை ஏற்படுத்தும் உரைகளை அண்ணாமலை நிகழ்த்தியிருந்தார். இதன் மூலம் அரசியலில் அதிகளவு கவனத்தை ஈர்ந்த ஒருவராக அண்ணாமலை இருந்துள்ளார். இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் அவரது உரைகள் அதிகளவு கவனத்தைப் பெற்றிருந்தது.

பொதுவாகவே அண்ணாமலையின் உரைகள் சர்ச்சைகளை ஏற்படுத்துபவையாகத் தான் இருக்கும். அதன் மூலம் ஊடகங்களின் பார்வையை தன் மீது வைத்திருப்பதில் அவர் எப்போதும் வெற்றி பெறுபவர். தமிழக பா.ஜ.க. தலைவராக நியமிக்கப்பட்ட குறுகிய காலத்திலேயே அவருடைய செல்வாக்கு உயர்வதற்கும், தமிழக மக்கள் மத்தியில் பா.ஜ.க. மீதான ஆதரவு அதிகரிப்பதற்கும் அவரது இந்த உபாயங்களும் காரணமாக இருந்துள்ளன. தமிழகத்தில் பா.ஜ.க.வின் செல்வாக்கை உயர்த்துவதற்கு ஈழத் தமிழர் விவகாரத்தையும் அவர் நுட்பமாகப் பயன்படுத்தி வருகின்றார். இலங்கையிலுள்ள தமிழ்க் கட்சிகளுடனான அவரது உறவாடலும் இதற்கு உதவியாக இருக்கின்றது.

குறுகிய காலத்துக்குள் யாழ்ப்பாணத்துக்கான தமது இரண்டாவது விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்த அவர் நிகழ்த்திய உரைகள் தென்னிலங்கையில் மட்டுமன்றி, வடக்கிலும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கின்றது. தமிழகத்தில் ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல் நடைபெறும் நிலையில், அதற்கான தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்க வேண்டிய அண்ணாமலை, அதனைத் தவிர்த்து விட்டு சுமார் நான்கு நாட்கள் வரையில் இலங்கையில் நின்றிருந்தார். யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தைப் பயன்படுத்தி இலங்கைக்குள் கால் பதித்த அவர் யாழ்ப்பாணத்தில் பல நிகழ்வுகளில் பங்கேற்றார். முக்கிய பிரமுகர்கள் பலரையும் சந்தித்தார். பின்னர் கொழும்பு சென்று அங்கும் முக்கிய சந்திப்புக்களை மேற் கொண்டார்.

ஈரோடு தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் திமுக கூட்டணி வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாகவுள்ளது. நீண்டகாலமாக அது ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் அவர் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாகவுள்ளது. அ.திமு.க. வேட்பாளர் தென்னரசுவை பா.ஜ.க. ஆதரிக்கின்றது. இதில் வெற்றி பெறமுடியா விட்டாலும் கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பது அண்ணாமலையின் திட்டம். இலங்கையில் தான் நிகழ்த்தும் உரைகள் இந்த இடைத்தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அண்ணாமலையின் கணிப்பு. அதே வேளையில், ஈழத் தமிழர் விவகாரத்தை கையில் எடுப்பதன் மூலமாக தமிழகத்தில் தன்னுடையதும், பாஜ.க.வினதும் செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்கு அண்ணாமலை தொடர்ந்தும் முயற்சிக் கின்றார்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாசார நிலையம் யாருடைய கைகளில் இருக்கும் என்பது பெரும் கேள்வியாக இருக்கும் நிலையில், இது தமிழர்களுக்காகவே அமைக்கப்பட்டது. அவர்களிடமே நாம் இதனைக் கையளிக்கின்றோம் என பலத்த கை தட்டல்களுக்கு மத்தியில் அறித்தது முதல், அவரது பெரும்பாலான உரைகள் சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது இதனால் தான்.



பொதுஜனபெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர, பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆகியோர் அண்ணாமலையின் கருத்துக்கு பதிலடி கொடுத்துள்ளார்கள்.

அண்ணாமலை கூறுவதுபோல் 13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வாக அமையாது. ஏனெனில் 13 ஆவது திருத் தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் உளறுவதை இந்தியத் தரப்பினர் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நேரம் அல்ல. 13ஆவது திருத்தத்தை பாராளுமன்றம் ஊடாக முழுமையாக இல்லாதொழிப்பதற்கான நேரமே கனிந்துள்ளது. இலங்கையில் 13இற்கு எதிராக பிக்குகள் கூட வீதியில் இறங்கியுள்ளமை அண்ணாமலைக்குத் தெரியவில்லையா? இது பௌத்த நாடு என்பதை அவர் மறந்து விட்டாரா என சரத் வீரசேகர தெரிவித்திருக்கின்றார்.



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர் வரும் காலங்களில் தேர்தல்களின் போது மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி போட்டியிட்டாலும் நாம் அதிர்ச்சியடையத் தேவையில்லை என்ற நிலைமையே தற்போது காணப்படுகின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கையும், கிழக்கையும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் கைகளிலே இலங்கை அரசாங்கம் எப்போது தாரை வார்த்தது? வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தலைவராக மோடி எப்போது பிரகடனப்படுத்தப்பட்டார்?

அண்ணாமலையின் கருத்துக்கள் ஊடாக எம்மிடம் எழுந்துள்ள இந்த கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்க வேண்டும். அண்ணாமலை அண்மையில் இலங்கை வந்து தமிழகம் திரும்பிய பின்னர் சர்ச்சைக்குரிய இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இதன் பின்புலம் தொடர்பில் நாம் தீவிரமாக ஆராய வேண்டும். இந்தியாவில் உள்ள ஒரு தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரை வைத்து அரசியல் நடத்த, அண்ணாமலை மோடியையும் வடக்கு – கிழக்கையும் இணைத்துப் பேசி அரசியல் நடத்துகின்றார். இலங்கை அரசாங்கம் இவற்றையெல்லாம் கைகட்டி ஏன் வேடிக்கை பார்க்கின்றது. எல்லாம் மர்மமாகவே உள்ளது என்று விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தென்னிலங்கையில் இவ்வாறான விமர்சனங்கள் வரும் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான். ஆனால், அதனையிட்டு கவலைப்படும் நிலையில் அண்ணாமலை இல்லை. தற்போதைய நிலையில் ஈழத் தமிழர்கள் தொடர்பாக எதனை யாவது இந்தியாவினால் செய்ய முடியுமாக இருந்தால் அது தன் மூலமாக மட்டுமே சாத்தியமாகும் என்ற கருத்தை அவர் உருவாக்கியிருக்கின்றார். தமிழகத்தில் பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றாக இருந்த அ.தி.மு.க. இரண்டாக உடைந்திருப்பது தி.மு.க.வுக்கு மட்டும் வாய்ப்பாக இல்லை. இதனைப் பயன்படுத்தி தமிழகத்தில் இரண்டாவது கட்சியாக வருவதற்கு பா.ஜ.க. முயற்சிப்பது இரகசியமானதல்ல. ஆனால், ஈரோட்டில் பா.ஜ.க.வுக்கு ஆதரவான நிலை மிகவும் சொற்பமாக இருப்பதால் அங்கு களமிறங்கி மண்ணைக் கவ்வாமல் அ.தி.மு.க. வேட்பாளர் தென்னரசுவை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை அண்ணாமலை எடுத்தார்.

ஆனால், இடைத் தேர்தலைத் தொடர்ந்து முன்னெடுக்கவுள்ள அரசியலுக்கு ஈழத் தமிழர் விவகாரத்தை கைகளில் எடுத்து செயற்படுவதற்கு அண்ணாமலை திட்டமிட்டிருப்பதாகவே தெரிகின்றது. தென்னிலங்கையில் சிங்கள இனவாதிகள் மத்தியில் அவருக்கு எதிராக எழக்கூடிய எதிர்ப்புக்களும், கோஷங்களும் தமிழகத்தில் பா.ஜ.க.வின் செல்வாக்கை அதிகரிக்கும்.

அதேவேளையில் இலங்கையில் செயற்படும் சிவசேனை, மற்றும் தமிழ்க் கட்சிகளுடனும் அவர் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியிருக்கின்றார். நம்பிக்கையையும் உருவாக்கியிருக்கின்றார்.. தமிழ்க் கட்சிகளுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் ஒரு உறவுப் பாலமாக தன்னால் மட்டும் தான் செயற்பட முடியும் என்ற நம்பிக்கையையும் அவர் உருவாக்கி வருகின்றார்.



அவரது சமீபத்திய யாழ்ப்பாண விஜயத்தின் போது மறைமுகமாகச் சொல்லப்பட்ட செய்திகள் பல. தமிழகத்தில் தமது செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்காக அவர் இந்தக் காய் நகர்த்தல்களை மேற் கொண்டாலும் கூட, இதன் மூலமாக எவ்வாறான பலன்களை தமது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும். உறுதியான அரசியல் தீர்வு ஒன்றுக்கு இந்த நிலைமைகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதையிட்டு தமிழ்த் தலைமைகள் சிந்தித்து செயற்பட்டால் அது ஈழத் தமிழருக்கு பயனுள்ளதாக அமையும்.



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்வரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

18 பெப்ரவரி 2023 முதல் 24 பெப்ரவரி 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம்

வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு தினம் 20 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வேலுப் பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சீனித்தம்பி செல்வம்

அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 14வது ஆண்டு நினைவுநாள் 18 பெப்ரவரி 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவபாக்கியம் இராமலிங்கம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவபாக்கியம் இராமலிங்கம் அவர்களின் ஒன்பதாவது ஆண்டு நினைவு தினம் 27 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சிவபாக்கியம் இராமலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 17வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி ருக்மணிதேவி முத்தையா

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வி ருக்மணிதேவி முத்தையா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாள் 12 பெப்ர வரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது உறவுகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது உற்றார், உறவினர்களோடு இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைஞ்சலி



### திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி

நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 03 மார்ச் வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகரெத்தினம் இராஜதுரை

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டி ருந்த திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களுடைய இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 27 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



18 பெப்ரவரி 2023 சனிக்கிழமை அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 14வத ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 பெப் 2023 கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோகுலனின் 17வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் கோகுலன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து 18 பெப் 2023 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



20 பெப்ரவரி 2023 திங்கட்கிழமை குடும்ப உறவுகள் தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




20 பெப்ரவரி 2023 திங்கட்கிழமை வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது 4வத ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



21 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி செல்வஜோதி செல்வரத்தினம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி செல்வஜோதி செல்வரத்தினம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



21 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி லக்‌ஷன் ரூபநிகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆத்விக் செல்வப்புதல்வி ஏரியானா ஆகியோரின் நான்காவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் சகோதரங்கள் இருவரும் தமது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



22 பெப்ரவரி 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோகுலனின் 15வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் கோகுலன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
01.08.1927



அம்பாள் திருவடியில்
07.03.2014

நயினாதீவைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த

### திருமதி சிவபாக்கியம் இராமலிங்கம் அவர்கள்

அம்மா! ஆண்டுகள் ஒன்பது கடந்தாலும் - மறையாது
எங்கள் கண்ணுக்குள் உங்கள் உருவம் - கணப்பொழுதும்
உங்களையே எண்ணி எண்ணி ஏங்கித் துடிக்கின்றோம்!
அன்னை நாகபூஷணியால் திருவடியில் ஆனந்தமாய் வாழ்வீர்களாக!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அகலுமா எங்கள் துயரம்?
நினைவலையாய் உங்கள் நினைவு - என்றும்
எங்கள் இதயத்தில் நிலைத்திருக்கும்!
ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப் பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்

தகவல்:- குலம் (மகன்) 647 677 8418


POOSHANY FINE ART'S
பூஷணி நுண்கலை பீடம்
பூஷணி
நுண்கலை
பீடம்
பெருமையுடன்
வழங்கும்
நீதன் முருகன் பாடல்
வெளியீட்டு விழா
காலம்: MARCH 05, 2023
நேரம்: 6.30 PM.
கனடா கந்தசுவாமி கோவில்
733 பேர்ச்மவுண்ட் வீதி
ஸ்காபரோ ஒன் MIK IR5
neethan1@hotmail.ca


அழகான வீடு விற்பனைக்கு
JUDE REALTOR
3210 Regional Road 30, Whitchurch-Stouffville
4+1
4
JUDE GNANENDRAN
Cell : 416-827-2347
MARISA PATHMANATHAN
Cell : 647-668-2158



தமிழீழத்தின் இசை வேந்தன்

# வர்ண.ராமேஸ்வரன்

நினைவரங்கத்தில்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகையின்

## 30வது ஆண்டு விழா

# இசைச் சங்கமம் 2023

தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்

## கலைமாமணி

# ராஜேஸ் வைத்தியா



**6:00PM**

CHINESE CULTURAL CENTRE

**5183 SHEPPARD AVE. EAST**

SCARBOROUGH

**APRIL 23 2023**

அன்பளிப்பு

VVIP $200 | VIP $100 | $50

**தொடர்புகட்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600**

விழா சரியாக மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.


வெண்ணிலா Entertainment வழங்கும்
APRIL FEAST 2023
Powered by
RICHMOND GABRIEL UNIVERSITY
SATURDAY
APRIL
15
5.00PM
2023
CANADA CHRISTIAN COLLEGE
300 Water St, Whitby, ON L1N 9B6
முத்துசிற்பி
முகேஷ்
மனோ
செல்வா
பிரகாஷ்
info: 416 757-1620
ஈழநாடு
HIGHWAY


Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0% முதல் 1.5% வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கடையில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் -
உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861


Friends MATRIMONY
உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...
10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்!
10,000+
இலங்கைத் தமிழர்களுக்கான
உலகளாவிய திருமண இணையத்தளம்.
647 709 1761
416 477 6854
416 477 2259
GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
friendsmatrimonym@gmail.com
Mon to Fri 10AM to 7PM
Sat 1PM to 7PM
www.friendsmatrimony.com

# நெடுமாறன் அறிவிப்பினால் யாருக்கு பயன்?

விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருப்பதாக தமிழ் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் கடந்த வாரம் கூறியது நிதானமாக சிந்திக்கக் கூடிய எவரையும் பரபரப்புக்கோ குழப்பத்துக்கோ உள்ளாக்கியிருக்க முடியாது. இதற்கு முன்னரும் சில தடவைகள் அவர் அவ்வாறு கூறியது எம்மெல்லோருக்கும் தெரியும்.

கடந்த திங்கட்கிழமை தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நெடுமாறன் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்புக்கு பிறகு இந்திய ஊடகங்கள் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் பார்க்கும் போது அவர் 2010ஆம் ஆண்டு தூத்துக்குடியில் செய்தியாளர்கள் மத்தியில் முதற் தடவையாக பிரபாகரன் உயிருடன் இருப்பதாக கூறினார். ஈழத்தில் போர் மீண்டும் மூளும். அதற்கு பிரபாகரனே தலைமை தாங்குவார் என்றும் அவர் கூறியதாக அறிய முடிகிறது.

பிறகு 2016 பெப்ரவரியில் கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் விடுதலைபுலிகளின் தலைவர் உயிருடன் இருப்பதாகவும் அவரது மரணத்தை இந்திய அரசாங்கம் ஒரு போதும் உறுதிப்படுத்தவில்லை என்றும் அவர் கூறினார்.

அடுத்து 2018 ஆம் ஆண்டில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் பிரபாகரன் ஒரு போதும் பிடிபடவில்லை. தப்பி வெளியேறி விட்டார் என்று கூறினார். அதை அந்த பத்திரிகையே கடந்த வாரம் மீண்டும் சுட்டிக்காட்டியது.

நெடுமாறனைப் போன்றே பிரபாகரனையும் விடுலை புலிகளையும் மையப்படுத்திய அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோவும் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமானும் நெடுமாறன் கடந்த வாரம் வெளியிட்ட தகவல்களுடன் உடன்படவில்லை.

தமிழ் தேசிய இயக்கத்தின் தலைவர் கூறிய தகவல்களை தனக்கு இருக்கக்கூடிய தொடர்புகள் மூலமாக உறுதி செய்ய முடியவில்லை என்று வைகோ கூறிய அதேவேளை. கடந்த வருடம் லண்டனில் இருந்து தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டவர்கள் பிரபாகரன் உயிருடன் இருப்பதாக இதே போன்று அறிக்கையொன்றை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டதாவும் ஆனால் தன்னுடன் அண்ணன் (பிரபாகரன்) தொடர்பு கொண்டு கேட்டால் அதற்குப் பிறகு அறிக்கையை வெளியிடுவதாக பதிலளித்ததாகவும் சீமான் கூறினார்.

போர்க்களத்தில் தமிழ் மக்களை கைவிட்டு தன்னையும் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொண்டு தப்பியோடுகின்ற கோழை அல்ல விடுதலை புலிகளின் தலைவர் என்றும் கூறிய சீமானிடம் பிரபாகரன் ஒரு நாள் வந்தால் என்ன செய்வீர்கள் என்று செய்தியாளர்கள் கேட்டபோது

கடவுள் இல்லை என்ற கொள்கையை கொண்டிருந்த ஐயா பெரியாரிடம் கடவுள் ஒருநாள் நேரில் வந்தால் என்ன செய்வீர்கள் என்று ஒரு தடவை கேட்டார்கள். அதற்கு அவர் அவ்வாறு வந்தால் கடவுள் இருக்கிறார் என்று சொல்லிவிட்டுப் போவோம் என்று பதிலளித்தார்.. அதே போன்று அண்ணன் உயிருடன் வந்தால் நாமும் சொல்லி விட்டுப் போவோம்` என்று பதில் கூறினார்.

பிரபாகரன் உயிருடன் நலமே இருக்கிறார். அவரின் குடும்ப உறுப்பினர்களுடன் நான் தொடர்பில் இருக்கிறேன். அவர்களின் அனுமதியுட



னேயே இதை அறிவிக்கின்றேன். ஈழத் தமிழர்களின் மீட்சிக்கான திட்டத்துடன் பிரபாகரன் விரைவில் வருவார். உலகம் பூராவும் வாழும் தமிழர்களுக்கு இதை அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஈழத்தமிழர்களும் உலகத் தமிழர்களும் அவருக்கு ஆதரவை வழங்க வேண்டும். தமிழ்நாடு அரசாங்கமும் சகல அரசியல் கட்சிகளும் அவருக்கு ஒன்றுபட்டு ஆதரவை வழங்க வேண்டும். தற்போதைய சர்வதேச நிலைவரமும் இலங்கையில் ராஜபக்ச ஆட்சி மக்கள் கிளர்ச்சியில் வீழ்த்தப்பட்ட சூழ்நிலையும் பிரபாகரன் பற்றிய இந்த தகவலை அறிவிப்பதற்கான பொருத்தமான தருணமாகும்` என்று நெடுமாறன் முள்ளிவாய்க்கால் முற்றசெய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார். மேலும் அவர். `விடுலை புலிகள் பலத்துடன் இருந்த போது இந்திய விரோத சக்திகள் தமிழ் மண்ணைப் பயன்படுத்த அவர்கள் ஒரு போதும் அனுமதிக்கவில்லை. இந்தியாவின் எதிரி நாடுகளிடம் இருந்து எந்தவொரு காலப்பகுதியிலும் எந்த உதவியையும் பெறாமல் இருப்பதில் பிரபாகரன் உறுதியாக இருந்தார்.

சீனா இப்போது இலங்கையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இந்தியாவுக்கு எதிராக சீனா இலங்கையைப் பயன்படுத்துவதை தடுக்க இந்திய அரசாங்கம் உகந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்து சமுத்திரத்தில் சீன ஆதிக்க அச்சுறுத்தலை தடுக்க இந்தியா தலையிட வேண்டும் என்றும் கூறினார்.

பிரபாகரனின் மனைவி. மகள் குறித்து கேட்டபோது அவர்கள் நலமாக இருக்கிறார்கள் என்று கூறிய நெடுமாறன் பிரபாகரனின் குண்டு துளைத்த சடலம் என்று காண்பித்து இலங்கை அரசாங்கம் 2009 மே 19 வெளியிட்ட காணொளி குறித்த கேள்விக்கு பதிலளிக்க மறுத்து விட்டார். அவருக்கு அருகில் இந்தியாவில் வசிக்கும் கவிஞர் காசி ஆனந்தனும் வேறு முக்கியஸ்தர்களும் கூட இருந்தனர். செய்தியாளர்கள் சந்திப்பின் முடிவில் அவர்கள் இனிப்பு பண்டங்களை எல்லோருக்கும் வழங்கி மகிழ்ந்ததை காணொளி மூலம் காணக்கூடியதாக இருந்தது.

பிரபாகரன் உயிருடன் இருப்பதாக நெடுமாறன் கூறிய முன்னைய சந்தர்ப்பங்களின்போது அந்த செய்திக்கு கொடுக்காத முக்கியத்துவத்தை இந்த தடவை இந்தியாவின் பிரதான பத்திரிகைகளும் மற்றைய ஊடகங்களும் கொடுத்திருக்கின்றன. கடந்த ஒரு வாரகாலமாக இந்திய தொலைக்காட்சிகளில் நெடுமாறனின் அறிவிப்பு மற்றும் அதற்கு இருக்கக் கூடிய பின்னணி குறித்து தொடர்ச்சியாக விவாதங்கள் நடை பெற்று வருகின்றன.

யூரியூப் தமிழ் அலைவரிசைகளை பிரபாகரன் பற்றிய கலந்துரையாடல்களும் நேர்காணல்களும் ஆக்கிரமித்திருக்கின்றன. அதன் காரணத்தினால் இந்த தடவை நெடுமாற னின் நடவடிக்கையின் பின்னால் அரசியல் காரணியொன்று இருக்கின்றது என்று அவதானிகள் பலரும் சந்தேகத்தை வெளிப்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

வைகோ. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் மற்றும் தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல் முருகன் போன்ற விடுதலை புலிகள் ஆதரவு அரசியல்வாதிகளையும் முள்ளிவாய்க்கால் முற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பங்கேற்கச் செய்து தனது அறிவிப்புக்கு பரந்தளவிலான `ஏற்புடைமையை` தோற்றுவிப்பதற்கு நெடுமாறன் முயற்சித்ததாகவும் இறுதி நேரத்தில் அது கைகூடாமல் போய் விட்டதாகவும் தமிழக செய்திகள் கூறுகின்றன.

பிரபாகரன் பற்றிய அறிவிப்பு காலப் பொருத்தமானதோ அல்லது அரசியல் பொருத்தமானதோ அல்ல என்றும் இதன் பின்னணியில் இந்திய அரசாங்கமும் அதன் உளவுப்பிரிவும் இருப்பதாகவும் திருமாவளவன் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இந்திய அரசாங்கத்திடமிருந்தோ அல்லது தமிழ்நாடு அரசாங்கத்திடமிருந்தோ இந்த கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருந்த தருணம் வரை எந்த பிரதிபலிப்பும் வெளியாகியிருக்க வில்லை. இந்த விவகாரத்தை மத்திய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப் போவதாகவும் அதற்கிடையில் தமிழ்நாடு அரசாங்கம் அதன் நிலைப் பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்றும் அகில இந்திய பயங்கரவாத எதிர்ப்பு முன்னணியின் தலைவரான மனிந்தர் ஜீத் சிங் பிட்டா திருப்பதி திருமலையில் செய்தியாளர்கள் மகாநாட்டில் கடந்த வியாழக்கிழமை கூறியதாக பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.



கட்டுரையாளர்:
கொழும்பில் இருந்து
– வீ.தனபாலசிங்கம் –

தமிழ் தேசிய இயக்கத்தின் தலைவரின் அறிவிப்பை எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே இலங்கை இராணுவம் உடனடியாகவே நிராகரித்தது. 2009 மே18 பிரபாகரன் இறந்ததை அன்றைய மகிந்த ராஜபக்ச அரசாங்கம் மரபணு சோதனை மூலம் உறுதிப்படுத்தியதாகவும் அந்த தகவலை அன்றைய இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப்முகர்ஜிக்கு ஜனாதிபதி மகிந்த தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியதாகவும் வெளியான செய்திகளையும் விடுதலைபுலிகளின் சர்வதேச உறவுகள் பிரிவு தலைவராக இருந்த குமரன் பத்மநாதன் (கே.பி.) 2009 மே 24 பி.பி.சி.க்கு வழங்கிய நேர்காணலில் `எமது இணையற்ற தலைவர் வீரமரணமடைந்து விட்டார்` என்று கூறியதையும் ஊடகங்களும் அரசியல் அவதானிகளும் கடந்த வாரம் நினைவுபடியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தன்னால் வெளியிடப்பட்ட தகவல்களுக்கு `சான்றாக` பிரபாகரனின் குடும்ப உறுப்பினர்களுடன் தான் வைத்திருப்பதாகக் கூறும் தொடர்புகளை மாத்திரமே நெடுமாறன் முன் வைத்திருக்கிறார்.

அதேவேளை. விடுதலைபுலிகளின் தலைவர் பற்றிய தகவல்களை வெளியிடுவதற்கு தற்போதைய சர்வதேச நிலைவரமும் ராஜபக்ச ஆட்சிக்கு எதிரான கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சியும் பொருத்தமான தருணம் என்று அவர் கூறிய கருத்து பல் வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

கடந்த வாரத்தைய அறிவிப்பும் முன்னைய அறிவிப்புக்களைப் போன்று இருந்ததே தவிர. வெளியுலகம் நம்பக்கூடியதாக புதிய தகவல் எதையும் நெடுமாறன் வெளியிடவில்லை. செய்தியாளர்களினால் கிளப்பப்பட்ட முக்கியம ான கேள்விகளுக்கும் அவர் உருப்படியான பதில்களை அறிவிக்கவில்லை. முன்னைய சந்தர்ப்பங்களைப் போலன்றி இத்தடவை முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றை அவர் வெளியிட்டார். அது ஒன்று தான் வித்தியாசம்.

தனது அறிவிப்புக்கு தமிழ்நாட்டு அரசியல் காரணிகள் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டதற்கு அவ்வாறு எதுவும் இல்லை என்று நெடுமாறன் திட்டவட்டமாக மறுத்ததாக இந்து ஆங்கில பத்திரிகையின் இணை ஆசிரியர் தி.இராமகிருஷ்ணன் கூறியிருந்தார்.

நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தேர்தல் அரசியலில் இருந்துஒதுங்கியிருக்கும் நெடுமாறன் அடுத்து வரக்கூடிய எந்தவொரு தேர்தலையும் மனதிற் கொண்டு இந்த அறிவிப்பைச் செய்திருக்க பெரும்பாலும்வாய்பில்லை.

இந்த நிகழ்வுப்போக்குகள் எல்லாம் இலங்கை அரசியலில் குறிப்பாக தமிழர் அரசியலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் இதனால் யாருக்கு பயன் என்பதும் முக்கியமான கேள்விகள (22ம்பக்கம்)

# தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்!

மனிதன் தன் சிந்தனைத் திறத்தால் புதியன கண்டு, கேட்டு, அமைத்துப் போற்றிடும் சிறந்த நாகரிகக் கூறாக தாய் மொழி உருவெடுக்கின்றது. எத்த னையோ தடைகளையும், சில காலங் களில் நேரும் காலத்தாழ்வு, பிற்போக்கு ஆகியவற்றையும் கடந்து தாய் மொழியை மாந்தன் தன் சிந்தனையால், உறவுத் தொடர்பால் எப்படியோ வளர்த்துக் காத்து வந்திருக்கிறான் என்பது வியப்பைத் தருவதாகும்.

மனித வாழ்வின் வளர்ச்சியோடு இணை வதாகவே இதனை எண்ண வேண்டும். மக்களின் அறிவையும், ஆற்றலையும், வளத்தையும், வறுமையையும், பழக்கத் தையும் அடிப்படைகளாகக் கொண்டு தாய்மொழியிலும், பிறமொழிகளிலும் புதிய சொற்கள் கலக்கின்றன.

அறிவு வளமிக்க மக்கள், பல்வேறு துறைகளில் ஈடுபட்டு உழைத்து, தம் முடைய தாய்மொழியில் அதிக எண் ணிக்கையில் சொற்களைப் பெருக்கினர். தாய் மொழியின் சொற்பொருள் ஈட்ட மும், அந்நாட்டார் வாழ்நிலையை, வாணிக நிலையைச் சுட்டிக் காட்டு கின்றன என்று கூறலாம். பேச்சுமொழி இயற்கையாக அமைவது. எழுத்து மொழி அறிவார்வத்தால் அமைவது. மக்கள் ஒருவரோடு ஒருவர் கூடிப் பழகித் தம் உணர்வுகளைப் பரிமாறி மகிழ்வதற்காகவே தாய்மொழியைப் பயன்படுத்துகின்றனர். பேசும் மக்களை விட்டுப் பிரித்துப் பார்த்தால், தாய்மொழி என்பது இல்லை என்பர். மக்களின்




அறிவில் அவ்வப்போது தோன்றும் புதுமைகள் அனைத்தும் பேசும் மொழி யில் படிந்து விடுகின்றன.

ஒரு நாட்டு மக்களின் முன், விரிந்து பரந்த உலகப் பொருண்மைகள் பலவாக நிற்கின்றன. உலகத்தில் பலவகைப் பொருள்கள், அவற்றின் இயல்புகள், தன்மைகள், செயல்கள் உள்ளன. பேசும் மக்களோ தம் அறிவு ஆற்றல்களில் தனித்தனி வேறுபாடு உடையவர்கள். அந்தந்தக் கூட்டத்தார் - நாட்டார் - அவரவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் ஏற்ற அளவில் உலகத்துப் பொருள்களைத் தத்தம் மொழியால் உணர்த்த முற்பட்டார்கள். நுண்ணிய கருத்துகளை உணர்ந்து சொற்களால் உணர்த்துவதற்குச் சில கூட்டத்தார்க்கு நெடுங்காலம் ஆகியிருக்கும். வேறு சிலர் குறுகிய காலத்திலேயே நுண்கருத்து களை உணர்த்தத் தொடங்கியிருப்பர்.

அவரவர்களின் வாழ்வில் எவ்வெப்போது எந்தெந்தப் பொருள்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனவோ, அந்தந் தப் பொருள்களுக்குரிய சொற்கள் அவ்வப்போது உருவாகியிருக்கும். பிரெஞ்சு மொழியில் உள்ள பாராளு மன்றத் தொடர்பான பல சொற்கள் ஆங் கிலத்திலிருந்து பெறப்பட்டவை.

ஏனெனில், பாராளுமன்றத்தை முதன் முதலில் உருவாக்கியவர் ஆங்கிலேயர். பிறகு பிற மொழியாளர் வந்து கலந்த போது, புதிய அல்லது நெருங்கிய தொடர்பில்லாத பொருள்களுக்கும் கருத்துகளுக்கும் உரிய சொற்கள் வந்து புகுந்திருக்கும். பிறர் கலப்பின் காரணமாக அல்லாமல், இயல்பாகவே தோன்றிய புதிய கருத்துகளுக்கு, தாமே அவ்வப்போது சொற்களைப் படைத்துக் கொண்டனர்.

பிறமொழியினர் பயன்படுத்தும் சொற் களையும், பொருட்பெயர்களையும் தன் மொழியில் எடுத்துரைக்க முயல்வதும் மனித மனத்தின் விழைவாகும். இம் முயற்சியில் தாய்மொழி கைவரப் பெறாத போது, பிறமொழியை ஏற்கும் முறையில் மொழிக் கலப்பு நடைபெறும். மக்கள்

எந்தெந்தத் துறைகளில் வளர்ச்சி எய்து கிறார்களோ அந்தந்தத் துறைகளில் பெற்ற வளர்ச்சிக்கெல்லாம் 'போலச் செய் தல் என்னும் இந்தத் தனிப்பண்பே காரணமாகும்.

குழந்தைகள் ஒரு வயதிலிருந்தே சொற் களின் பொருள் புரிந்து எதிர்வினை ஆற்றத் தொடங்குவர். எனவே அப் போதே தெரிந்து கொண்ட மொழிதான் தாய்மொழியாகும். அடுத்து கற்கும் இரண்டாம் மொழியில் சொல் அமைவு களும், வாக்கிய அமைப்புகளும், உரு வாவது கண்கூடு. புலம்பெயர்ந்த தமிழர் களின் குடும்பங்களிலும், பெற்றோர் பேசும் தமிழிலிருந்து, மொழியைக் கற்றுக் கொள்ளும்போது, நம் பண் பாட்டு விழுமியங்களை விளங்கிக் கொள்கின்றனர். வங்க நாட்டில் வாழ்ந்த வர்கள், நாங்கள் பேசுகிற மொழி, வங்க மொழி.பாகிஸ்தான் ஆட்சி செலுத்துகிற மொழிஉருது மொழி. எனவே, உருது மொழியை ஆட்சி மொழியாக்கி எங்கள் மீது திணிக்காதே என்றார்கள். எல்லோ ரும் ஒருமையாக, ஒன்றுபட்ட இனமாக நின்று, நாங்கள் மண்டியிட வேண்டு மானால் உங்களிடத்தில் வருகிறோம். ஆனால், எங்கள் அழுகைக்கும், கண்ணீ ருக்கும், புன்னகைக்கும் வேறு மொழி இருக்கிறது என்றார்கள். அப்படிக் கூறிய போது தான் பாகிஸ்தான் பிரண் டது. மதம் காரணமாகத் தான் நாடே பிரிந்தது. மதம் நமக்கு பெரிதாக இருந்த போது கூட இவர்கள் என்ன மொழிபேசுகிறார்கள் என்று கேட்டார்கள்.

வங்கமதான் அவர்களை இணைத்தது. வங்க மொழிதான் எங்கள் ஆட்சி மொழி எங்கள் பேச்சு மொழி வங்கம் தான்' என் றார்கள். கையில் வைத்திருக்கும் வேத புத்தகத்தின் மொழி வேறாக இருந்தாலும் வங்கம் தான் எங்கள் தாய்மொழி' என்றார்கள். அப்படி இருந்த போது இளைஞர்கள் தான் இதை பெரிதாகப் பேசினார்கள்.

இளைஞர்களில் நால்வரை வங்கத்தில் சுட்டு விட்டார்கள். அவர்கள் சுடப்பட் டதற்கு ஒரு பெரிய நினைவுச் சின்னம் டாக்கா நகரத்தில் அமைத்திருக்கிறார் கள். இப்படி இவர்கள் செய்த எழுச்சி யாலும், புரட்சியாலும் ஐக்கிய நாடுகள் அவை, எப்படி இந்த நாடு வந்தது, மொழியால் தானே வந்தது? எனவே, அவர்கள் இறந்த அந்த நாளை நினைவு படுத்தி, தாய்மொழி நாள் என்று அறிவிக்கலாம்' என்று முடிவெடுத்தது.

வாழ்கிற இடத்திலேயே பல்லாண்டுகள் இருந்தால், வாழ்கிற சூழல் எப்படி இருக்கிறதோ, அச்சூழலுக்கு ஏற்றபடி நம்மொழி, அமைந்துவிடுகிறது. இந்த மொழி எங்கே மூளையில் அமைகிறது? யார் இந்த குழந்தைக்கு அதிகமான ஒலிக்குறிப்புகளை அறிவிக்கிறார்கள் என்றால் காது தான்.

மூன்றாவது மாதத்திலேயே குழந்தை க்குக்காது கேட்கத் தொடங்குகிறது. கருப்பையிலும் கூட ஒலியைக் கேட்கிற பழக்கம் குழந்தைக்கு உண்டாம்.

அதனால் தான் திருவள்ளுவர், செல்வத் துள் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம் செல்வத்துள் எல்லாந் தலை' என்றார். 'எங்கள் தந்தை மொழிதான் எங்களுக்கு பெருமை தருகிறது' என்று ஜெர்மானியர்கள் சொல்கிறார்கள். ஜெர் மானியர்கள் 'தந்தை மொழி' என்கிறார் கள் நாம் 'தாய்மொழி' என்கிறோம்.

நமக்கு வேண்டிய பொருளை, நலந் தருகிற பொருளை 'தாயே என்று போற்றுவதால் அது தாய்மொழியாகிறது. உலகத் தாய்மொழி நாள் என்று எண் ணுகிற போது, நமக்கொரு பெருமிதம், உலகமொழிகளுக்கெல்லாம் எங்கள் மொழிதான் தாய் என்று சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சியடையலாம். எனவே தாய்மொழித் திருநாள் தாய் உணர்வு போல, தாயை காப்பது போல, குடும்பத்தை காப்பதுபோல, குழலைக் காப்பதுபோல, நம்முடைய மூலத்தைக் காப்பது போல. எனவே, நாம், நம் முடைய வேரை மறக்கப் கூடாது.

தென்னமெரிக்காவில் உள்ள சிலிநாட்டின் தென்கோடியில் அந்நாட்டின் தொன் மக்களில் ஒரு குழுவினர் பேசிவந்த, 'யாகன்' என்னும் மொழியைப் பேசி வந்த, கடைசி நபர் (பெண்மணி), கிறித்தீனா கால்தெரோன் என்பார் தனது 93-ஆவது வயதில் சென்ற ஆண்டு பிப்பிரவரி 16 அன்று இறந்து போனார். அவருடன் அவர் பேசிய மொழியும் முற்றாக அழிந்து போனது.

நல்ல செயலாக அவர் பேசியதிலிருந்து அவருடைய மகள் இலிதியா கோன்சாலேசு கால்தெரோன் சொற்களைத் தொகுத்து ஓர் அகராதி உருவாக்கி வந்துள்ளார். யாகன் மக்களின் சில பழக்க வழக்கங்கள் இன்றும் தொடர்கின்றது என்றாலும், அவர்களின் மொழி அழிந்து விட்டது. மீட்டுருவாக்கலாம், எனினும் அது அவ்வளவு எளிதன்று. அப்பகுதி மக்கள் முதியவர்களை பாட்டி ஆச்சி ஆயா - அம்மாயி என்னும் பொருளில் எகப் பானிய மொழிச்சொல்லான 'அபுயெலா' கால்தெரோன் என்றழைப்பர்.

உலகில் மக்கள் தாம் பேசும் தாய் மொழியைச் சார்ந்தே குழுக்களாக அணி சேர்கிறார்கள். அவ்வகையில் நம் தாய் மொழியான தமிழ்தான் நமக்குத் தமிழர் கள் என்ற அடையாளத்தைத் தந்திருக் கிறது. அது மட்டுமல்லாமல் நம் தமிழ் மொழிக்கு இருக்கின்றது போல இலக் கணநூல் வளமையும் இலக்கிய நூல்களின் செழுமையும் ஏனைய மொழி களுக்கு வாய்க்கவில்லை என்பதை 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்ற பாடல் வாயிலாகத் தேசியக் கவி பாரதியாரே வலியுறுத்தியுள்ளார்.

நாட்டை, 'தாய்நாடு' என்றும், மொழியை 'தாய்மொழி' என்றும் அழைப்பது வழக்கமாகும். 'தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளும் நினைக்கத் தக்கன.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எப் போதும் தமிழ் என்ற நெறிக்கிணங்கத் தமிழ் நாடு அரசு காலத்தாலும் கருத்தா லும் தொன்மை வாய்ந்த தாய்மொழியை வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பயன்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் முன்னணியில் நிற்கிறது.

மொழி என்பது வரலாற்று சான்றாக விளங்குவதால், தாய்மொழி காக்க பேச்சு மொழியாக மட்டுமின்றி, எழுத்தறிந்து ஏனைய இலக்கியமறிந்து, தொன்மையில் நின்று, பண்பாட்டுடன் தலைநிமிர்ந்து வாழ இத்திருநாளை நினைந்து போற்று வோம்!

எனவே கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த மொழியாம் ஒப்பிலாத நம் தாய்மொழியை ஏற்றிப் போற்ற வேண்டும் என்று இந்த உலகத் தாய்மொழி நாளில் நாம் உறுதி யேற்போம். பெப். 21 உலகத் தாய்மொழி நாள்-ஔவை அருள்



# தேசியமெனும் வெற்றுக்கூடு அன்றும் இன்றும்

அரசியலில் ஒரு கூற்றுண்டு. அதாவது, பஸ்ஸை தவறவிடுதல். வாய்ப்புகள் கிடைக்கின்ற போது, அதனை கெட்டியாக பற்றிக் கொள்ள வேண்டுமென்பது தான் இந்தக் கூற்றின் பொருளாகும். தமிழில் இதனை காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுதல் எனலாம். ஒரு மேற்குலக நாடொன்றின், தூதுவருடனான கலந்துரையாடலொன்றின் போது இதனை நான் குறிப்பிட்டேன். அவர் திரும்பக் கூறினார், நீங்கள் பஸ்ஸை தவற விட்டது மட்டுமல்ல, பஸ்ஸிலிருந்து பாய்ந்தும் இருக்கின்றீர்கள்.

திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா கூறுவார். அதிர்ஷ்ட தேவதை எப்போதாவது தான் கதவை தட்டுவார். அவர் கதவை தட்டும் போது தாமதிக்காமல் கையை பிடித்து, உள்ளுக்குள் இழுத்துக் கொள்ள வேண்டும். அதிர்ஷ்ட தேவதை கதவைத் தட்டும் போது சீ போ என்று கூறி துரத்தி விட்டால், அதன் பின்னர் அவர் ஒரு போதும் கதவை தட்டப் போவதில்லை.

அரசியலில் வாய்ப்புகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் கிடைப்பதில்லை. ஒரு அரசியல் சமூகம் என்ன தான் திறமைகள் பொருந்தியதாக இருந்தாலும் கூட அதனிடம் தியாகங்களும் அர்ப்பணிப்புமிருந்தாலும் கூட வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக் கொள்ளா விட்டால் அந்தச் சமுதாயத்தின் தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் இறுதியில் விழலுக்கு இறைத்த நீராகும்.

இந்த அனுபவத்திற்கு நாம் வேறு எங்கும் செல்ல வேண்டியதில்லை. நாம் தான் இதற்கு மிகவும் சிறந்த உதாரணம். 13 வருடங்களுக்குப் பின்னர் பிரபாகரன் இருக்கின்றாரென்று ஒருவர் கூற, அதனை முன்வைத்து விவாதம் இடம் பெறுகின்றதென்றால், விதியே, இந்த ஈழத் தமிழினத்தை என்ன செய்யப் போகின்றாய் என்று மனம் நோவதைத் தவிர, இந்த சமுதாயத்தில் வேறு எதனைச் செய்ய முடியும்? 'முறிந்த பனை' நூலின் முகப்பில் ஒரு குறிப்புண்டு.

அதாவது, புத்தியுள்ள ஒவ்வொரு மனிதனும் எரிகின்ற தேசத்தை விட்டு விட்டு ஆகக் குறைந்த நன்றியுணர்வு கூட இல்லாமல் ஓடிக் கொண்டிருக்கின்றான். இன்று தமிழ்த் தேசியமென்னும் பெயரில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் குத்தாட்ட அரசியலை எண்ணினால், தமிழ் சமூகத்தில் எஞ்சியுள்ள புத்திமிக்க சமூகமும் வீழ்ச்சியடைந்து செல்கின்றதா என்னும் கேள்வியையே நாம், நமக்குள் கேட்க வேண்டியிருக்கின்றது. மார்டின் லூதர்கிங் கூறுவது போன்று இங்கு பிரச்சினை தீயவர்கள் அல்லர். ஆனால், அந்தத் தீயவர்களின் செயல்களை கண்டும் காணாமல் இருக்கின்றார்களே நல்லவர்கள். அவர்கள் தான் நமது தலைமுறையின் பிரச்சினையாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு, நமது காலத்தில் நம்மால் ஆதரிக்கப்பட்ட ஒரு போராட்ட இயக்கம் என்பதில் பலராலும் மாறுபட முடியாது. ஏனெனில் அது தான் உண்மை. இந்தக் கட்டுரையாளர் உட்பட தற்போது தமிழ் சூழலில் கருத்துருவாக்கங்களில் முன்னணி வகிக்கும் பலரும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாக இருந்தவர்கள் தான். ஆனால் ஒரு வீழ்ச்சியேற்பட்ட பின்னர் சரி, பிழைகளை நிறுத்துப் பார்ப்பது தான் அறிவுக்கு முன்னுரிமையளிக்கும் அல்லது படித்தவர்களென்று கூறப்படும் சமூகமொன்றின் தலையாய பணியாகும்.

ஆனால் அது நமது சமூகத்தில் நிகழவில்லை. நிகழ்ந்திருக்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால் .இன்று 13 வருடங்களுக்குப் பின்னரும் கூட பரபரப்பில் காலத்தை விரயம் செய்ய வேண்டியேற்பட்டிருக்காது. ஈழத் தமிழ் சமூகத்தின் படித்தவர்களென்னும் இறுமாப்பு, அதன் கண் முன்னாலேயே சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது. அறிவுள்ளவர்கள் என்போர் அனைவரும் வாய் மூடிக் கிடக்கின்றனர். அறிவை ஆயுதமாக்கிக் கொள்ள முடியாத சமூகமொன்றினது, அறிவின் பெறுமதியென்ன என்பது இந்தக் கட்டுரையாளருக்கு புரியவில்லை. புரிந்தவர்கள் கூறுங்கள். பிச்சை வேண்டாம் நாயை பிடியுங்கள். இப்படியொரு கூற்றுண்டு. கிட்டத்தட்ட இப்படியானதொரு நிலையில் தான், இன்றைய தமிழ்த் தேசிய



அரசியல் இருக்கின்றது. முகநூல், வட்ஸ்அப், யூ டியூ ப் இல்லாவிட்டால் தமிழ்த் தேசியமில்லை. முன்னர் செயலால் தீர்மானிக்கப்பட்ட தமிழ்த் தேசிய அரசியல் இப்போது, சைபர் வெளியால் தீர்மானிக்கப்படு கின்றது. ஈஸி கேஸ் போன்று ஈஸி தேசியம். ஒரு முகநூல் கணக்கு அல் லது யூ டியூ ப் இருந்தால் தேசியவாதியாகி விடலாம். ஆனால் நாம் கடந்து வந்த பாதையை எண்ணிப் பார்த்தால் எத்தனை தியாகங்கள், எத்தனை அர்ப்பணிப்புகள். பல்லாயிரம் பேர் தங்களின் வாழ்வை கொடுத்திருக்கின்றனர். ஆனால் இப்போது எவ்வித அர்ப் பணிப்புமில்லாத ஒரு குழுவினர் அரசியலை சாதாரணமாக தீர்மானித்து விட்டுச் செல்கின்றனர். இந்தக் கட்டுரையாளர் பல வருடங்களுக்கு முன்னர் 'தேசியம் ஒரு வெற்றுக் கூடென்னு தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார்.

தேசியம் ஒரு வெற்றுக் கூடென்பது, அல்ஜீரிய சிந்தனையாளர் பிரான்ஸ்ட் பேனானின் கருத்தாகும். தேசியவாதம் தொடர்பில் பல பார்வைகள் உண்டு. ஆனால் பேனானின் பார்வை மிகவும் கனதியானது. தேசியம் ஒரு வெற்றுக் கூடென்று கூறுவதால் தேசியவாதம் வெற்றுத்தனமான கோசமென்று எண்ணி விடக் கூடாது. அந்த அடிப்படையில் நானும் இந்த விடயத்தை பயன்படுத்தவில்லை.

ஆனால் ஒரு தேசியவாத அரசியல் போக்கிற்கு எவர் தலைமை தாங்குகின்றாரோ, அவரது அல்லது குறித்த குழுவினுடைய பண்புகளையே குறித்த தேசியவாதப் போக்கு வெளிப்படுத்துமென்பது தான் பேனானின் வாதம். தேசியவாத அரசியல் போக்குகளை புரிந்து கொள்வதற்கு இது மிகவும் சரியானது.

உதாரணமாக ஒரு தேசியவாத அரசியல் போக்கிற்கு மதவாதத்தை முன்னிலைப்படுத்துபவர் தலைமையேற்றால், அந்த தேசியவாதம் மதவாத முகத்தையே காண்பிக்கும். உதாரணமாக பி.ஜே.பி. முன்னிலைப்படுத்தும் இந்துத்வா தேசியவாதம். இந்திய அரசியலுக்கு காங்கிரஸ் தலைமை யேற்கும் போது, இந்துத்வா அடையாளம் முன்னிலை வகிக்காது. ஏன்?

ஏனென்றால் தலைமை தாங்குபவரின் கருத்தியல் சார்புநிலையே அவர் தலைமையேற்கும் அரசியலை தீர்மானிக்கின்றது. அதே போன்று, இடதுசாரி கருத்தியல் சார்பு நிலை கொண்டவர்கள் தேசியவாத அரசியலுக்கு தலைமையேற்கும் போது, அங்கு தேசியவாதம் வேறு முகத்தை காண்பிக்கும். இதன் காரணமாகவே தேசிய வாதத்தை வெற்றுக் கூடென்று பேனான் கூறுகின்றார். தேசியவாத மென்னும் வெற்றுக் கூட்டை ஒவ்வொருவரும் தங்களின் விருப்பு, வெறுப்புகளால் நிரப்பிக் கொள்கின்றனர். இந்த பின்புலத்தில் நோக்கினால், 2009 இற்கு முன்னர் தமிழ்த் தேசிய வாத அரசியல் எவ்வாறிருந்தது, அது இப்போது எவ்வாறிருக்கின்றது என்பதை ஒருவர் இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

2009 இற்கு முன்னர் தமிழ்த் தேசியவாதம் அன்றைய செயல்களால் தீர்மானிக்கப்பட்டது. அர்ப்பணிப்பும் தியாகங்களுமே அன்றைய தமிழ்த் தேசியத்தை தீர்மானித்தது. இன்றோ எவ்வித செயல்களுமில்லாதவர்களே தமிழ்த் தேசியத்தை தீர்மானிக்கின்றனர். இன்று தேசியமென்னும் வெற்றுக்கூடு வெறுமனே தேர்தல் வெற்றிக்கான முயற்சிகளாலும் வெறும் கோசங்களாலும் வெளியாரின் தயவுக்கான எதிர்பார்ப்புகளாலும் மட்டுமே நிரம்பியிருக்கின்றது.

எங்கு தாங்கள் முன் வைக்கும் விடயங்களை வெற்றி கொள்வதற்கான ஆகக் குறைந்தளவு அர்ப்பணிப்பு கூட, இல்லாமலிருக்கின்றதோ. அங்கிருந்து எந்தவொரு நன்மையையும் மக்கள் பெறமுடியாது. இன்றைய தமிழ்த் தேசியமென்பது வெறும் கோசங்களால் நிரப்பப்பட்டிருக்கும் வெற்றுக் கூடு மட்டுமே. இந்த வெற்றுக் கூடு மக்களுக்கு எவ்வித நன்மையையும் வழங்காது.

ஏனெனில் இன்று தமிழ்த்தேசியத்திற்கு தலைமையேற்றிருப்பதாக கூறிக்கொள்வோர் எவருமே, தாங்கள் கூறுவதை அடையும் வழிமுறை அறியாதவர்கள். ஒருவகையில் இன்று தமிழ் மக்களின் நிலைமை, லொட்ரியில் அதிர்ஷ்டம் கிடைக்குமென்று நம்பிக் கொண்டு தினமும் தவறாமல் லொட்ரிச் சீட்டு வாங்கிக் கொண்டிருப்பது போன்ற ஒன்று தான். இதில் இன்னொரு பிரிவு, தேசியமென்னும் பெயரால் மக்களை மேலும் ஓட்டாண்டியாக்கும் இலக்குடன் செயற்படுபவர்கள். ஒப்பீட்டடிப்படையில் இவர்களே மிகவும் ஆபத்தானவர்கள். இவ்வாறானவர்கள், மற்றவர்கள் அனைவரை விடவும் தங்களை மட்டுமே புனிதர்களாக பிரசாரம் செய்து வருகின்றனர். ஏனையவர்களை கைக்கூலிகளென்றும் ஒட்டுக் குழுக்களென்றும் கூற முற்படுகின்றனர்.

இந்த அரசியல் போக்கு ஆபத்தானது. தங்களை புனிதர்களாகக் காண்பித்துக் கொள்ள இவர்கள், கொள்கையென்னும் துருப்புச் சீட்டை பயன்படுத்துகின்றனர். இவர்களை பொறுத்தவரையில் ஒரு விடயத்தை தொடர்ந்து அப்படியே கிளிப்பிள்ளை போல் கூறி வருவது தான் கொள்கை.

உண்மையில் இது கொள்கைக்கு கொடுக்கப்படும் மிகவும் கொச்சையான விளக்கமாகும். இது அறிவுநிலைக்கு

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



அப்பாற்பட்டது. இது சரியென்றால், .ப்போது உலகில் சிறந்த கொள்கைவாத தலைவராக வட கொரிய சர்வாதிகாரி கிம் ஜோங் உன்னின் தலைமுறையைத் தான் கூற வேண்டும். உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதும் அவை எவற்றையும் கருத்தில் கொள்ளாது இப்போதும் வட கொரியாவை உலகிலிருந்து தனிமைப்படுத்தியே ஆட்சி செய்கின்றனர். இதனை சிறந்த கொள்கையென்று கூற முடியுமா?

உண்மையில் கொள்கை யென்பது மாற்றங்களைக் கண்டு அஞ்சியோடுவதல்ல. மாற்றங்களை ஏற்றுக் கொள்ள மறுப்பதல்ல. மாறாக, மாற்றங்களை உள்வாங்கி, அந்த மாற்றங்களுக்கு ஏற்ப சமூகத்தை முன்னேற்றுவது. தங்களை நம்பும் மக்களுக்கு அபிவிருத்தியையும் ஏற்றத்தையும் கொடுப்பது. மக்கள் தொடர்ந்தும் வறுமையில் வாடுகின்றனர், ஏனைய சமூகங்களை விடவும் பின்தங்கிய நிலையிலிருக்கின்றனர் என்றால், நமது கொள்கைவாதத்தின் பெறுமதியென்ன? உலகில் வளர்ச்சியடைந்த அனைத்து சமூகங்களும் மாற்றங்களை ஏற்றுக் கொண்ட சமூகங்கள் தான். மாற்றங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கும் சமூகங்கள் தொடர்ந்தும் பின்நோக்கியே சென்றிருக்கின்றன.

மற்றவர்களிடம் கையேந்திக் கொண்டிருக்கின்றன. இதற்கு இலங்கை ஒரு சிறந்த உதாரணம். அரசியல் முன்னோக்கி நகர்வதை தடுக்கும் கடும் போக்குவாதிகளுக்கு முன்னுரிமையளித்தமையால் தான், நாடு இவ்வாறானதொரு நிலையிலிருக்கின்றது. இதனை நாம் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே இப்போது தமிழ் மக்களுக்குத் தேவையான தமிழ்த் தேசியவாதம் தாராளவாத தமிழ்த் தேசியவாதமாகும். இருப்பதை உச்சமாக பயன்படுத்திக் கொண்டு, கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலுள்ள இளைய தலைமுறையொன்று தேசியமென்னும் வெற்றுக் கூட்டை நிரப்ப வேண்டும்.



# செல்போன் இல்லாமல் ரயிலில் 10 மணி நேரம் பைடனின் இரகசிய பயணம் சாத்தியமானது எப்படி?

கட்டுரையாளர்:
– சாரா ஸ்மித் –

பலாலியில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உக்ரேனுக்கு ஒரு துணிச்சலான பயணத்தை மேற்கொண்டுள்ளார். தினந் தோறும் தாக்குதல் நடக்கும் ஒரு போர்க் களத்திற்கு சென்ற ஜோ பைடனின் இந்த பயணம் நவீன காலத்தில் அபூர்வமானது என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளியன்று தான் இறுதிக்கட்ட முடிவு எடுக்கப்பட்டது.

இந்த பயணத்தில் பைடனுடன் ஒரு சிறிய குழு மட்டுமே சென்றது. ஒரு மருத்துவக் குழு மற்றும் சில பாதுகாப்பு அதிகாரிகள். இரண்டு பத்திரிகையாளர்கள் மட்டுமே அதிபருடன் பயணிக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் பயணமும் இரகசியமாக வைக்கப்பட்டது. அவர்களின் மொபைல் போன்கள் எடுத்து கொள்ளப்பட்டது. பைடன்



இதற்கு முன்பு ஈராக் மற்றும் ஆப்கானிஸ் தான் என போர் நடக்கும் பகுதிகளுக்கு அமெரிக்க அதிபர்கள் சென்ற போது பலமான அமெரிக்க இராணுவ

கீவ்விற்கு வந்த பிறகு தான் அது குறித்து அவர்கள் செய்தி வெளியிட அனுமதிக்கப்பட்டது.பைடன் கீவ்விற்கு செல்வதற்கு சற்று முன்பு தான் இந்த



போதும் இராணுவபயிற்சி பெறவில்லை. ஆனாலும் களத்தில் அவர்கள் முன்னோக்கிச் சென்று போராடிய விதம் சிறந்த வீரத்திற்கு குறைவானது அல்ல. இப்போது உலகம் முழுவதும் அவர்களை அறிந்துள்ளது, என்று பைடன் கூறினார்.

### உக்ரேனிய அதிபரைச் சந்தித்த பின்

அவரும் ஜோபைடனும் ஒரு தொலைக் காட்சி ஒளிபரப்பில் தோன்றி வெளியிட்ட கூட்டறிக்கையில், 'ஜனநாயக உலகம்'' இந்த 'போரில்'' வெற்றி பெற வேண்டும் என்று குறிப்பிட்டனர். உக்ரேனுக்கு தொடர்ந்து அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று பைடன் தெரிவித்தார்.

உணவுசாப்பிட்டு விட்டு அமைதியாக வாஷிங் டனில் இருந்து புறப்பட்டதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூயார்க் டைம்ஸ் தனது செய்தியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வெள்ளைமாளிகை வெளியிட்ட அதிபரின் பயண நிரலின்படி அவர் திங்கள் கிழமை வாஷிங்டனில் தங்கியிருந்து மாலை வார்சாவுக்குச் செல்ல வேண்டும் என இருந்தது குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டுக்கு முன்பு உக்ரேன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்பு படையெடுப்பைத் தொடங்கிய பிறகு அந்நாட்டுக்கு அமெரிக்க அதிபர் செய்யும் முதலாவது பயணம் இதுவாகும். முன்னதாக, போலந்து அதிபர் ஆண்ட்ரேஜ் டுடாவை சந்திக்க பைடன் உக்ரேனுக்கு அருகே உள்ள போலந்துக்கு சென்றிருந்தார்.

### வெள்ளை மாளிகை அறிக்கை

ஜோ பைடனின் பயணம் குறித்து அமெரிக்கஅதிபரின் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், அதிபரின் கிவ் பயணம், உக்ரேனின் ஜனநாயகம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான எங்கள் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் அதில், 'உக்ரேன் பலவீனமாக இருப்பதாகவும், ஐரோப்பா பிளவுபட்டதாகவும் நினைத்து புடின் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன்பு அந்நாட்டை தாக்கினார். எங்களை சோர்வடையச் செய்யலாம் என அவர் நினைத்தார். ஆனால் அவர் தவறு செய்தார், என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜோ பைடன் தமது மண்ணுக்கு வந்து சென்ற சில நிமிடங்களில் உக்ரேனிய அதிபர் ஸெலென்ஸ்கி தனது அதிகார பூர்வ டெலி கிராம் கணக்கில் இருந்து, அமெரிக்க அதிபருடன் கைகுலுக்கும் படத்தை வெளியிட்டார்–பிபிசி

ஆதரவுடன் சென்றனர். போலாந்தில் ஜோ பைடன் இருந்த போது அவர் உக்ரேனுக்கு பயணம் மேற் கொள்வார் எனப் பத்திரிகையாளர்கள் ஊகித்திருந்த போதும் பைடனின் பயணம் பலரையும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

போலாந்தில் உக்ரேன் மக்கள், அமெரிக்காவின் ஆதரவு குறித்து உரையாற்றியிருந்தார் பைடன் ஆனால் அவரின் பேச்சைக் காட்டிலும் சைரன் சத்தத்திற்கு மத்தியில் உக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கியின் அருகில் அவர் இருந்தது வலுவான பல செய்திகளை சொல்கிறது.

அது ஒரு ஆபத்தான பயணம் ஆனால் தனது கடமைகளைத் தீவிரமாக எடுத்து கொள்பவர் பைடன் என்பதை இந்த பயணம் காட்டுகிறது என வெள்ளை மாளிகையின் செய்தி இயக்குநர் கேட் பெடிங்ஃபீல்ட் தெரிவித்தார்.

### மொபைல் போன்கள் இல்லை

கடந்த திங்களன்று மாலை அமெரிக்காவிலிருந்து போலாந்து தலைநகரான வார்சாவிற்கு இரண்டு நாள் பயணம் மேற் கொள்ள திட்டமிட்டிருந்தார் பைடன். பயணத்தின் போது அவரின் திட்டம் என்ன என்பதில் இரு இடங்களில் நீண்ட நேரத்திற்கு எதுவும் குறிப்பிடாமல் இருந்தால் அவர் உக்ரேனுக்கு செல்லலாம் என சந்தேகங்கள் எழுந்தன.

வெள்ளை மாளிகையில் தினந்தோறும் நடைபெறும் பத்திரிகையாளர்களின் சந்திப்பின் போது இதுகுறித்து தொடர் கேள்விகள் எழுப்பப்பட்டாலும் உக்ரேன் அதிபருடன் எந்த சந்திப்பும் இல்லை என்றும் வார்சாவை தவிர எங்கும் செல்ல திட்டம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. கீய்விற்கு பயணம் மேற் கொள்ள வேண்டும் என ஒரு மாத காலமாக திட்டமிடப்பட்டு வந்தாலும்

பயணம் குறித்து ரஷ்யாவுக்கு தெரிவிக்கப்பட்டது என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக்சுவிலன் தெரிவித்தார்.

தாக்குதல் நடைபெறுவதை தடுப்பதற்கான நோக்கத்தில் எங்களின் செய்தி ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டது. ஆனால் அது எத்தகைய செய்தி, அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்பதை விளக்க இயலாது என அவர் தெரிவித்தார்.

### 10 மணி நேர ரயில் பயணம்

கீவ்விற்கு செல்ல பத்து மணி நேர ரயில் பயணத்தை மேற்கொண்டார் அதிபர் பைடன். அவர் உக்ரேனில் எளிதாக செல்லக்கூடிய பிற இடங்களுக்கு சென்றிருக்கலாம் ஆனால் அவர் கீவ்விற்கு செல்ல திட்டமிட்டார். இதன் மூலம் உக்ரேனுக்கு உதவுவதில் அமெரிக்காவுக்கு உள்ள உறுதி குறித்து ரஷ்யாவுக்கு காட்டப்படுகிறது.

பைடனின் ஊடக செயலர் கரின் ஜேன் பியரி, பைடன் எப்போதெல்லாம் உரையாற்றுகிறாரோ அது அமெரிக்க மக்களுக்கு மட்டுமல்ல உலகத்தில் உள்ள அனைவருக்கும் தான் என தெரிவித்துள்ளார்.

மேலும், குடியரசுக்கட்சியைச் சேர்ந்த சிலர் எத்தனை நாட்களுக்கு அமெரிக்கா உக்ரேனுக்கு ஆதரவு வழங்கும் எனக் கேட்டதற்கான பதில் இது, என அவர் தெரிவித்தார்.

### பைடன் பேசியது என்ன?

உக்ரேனிய குடிமக்களைப் பாராட்டிய ஜோ பைடன், இராணுவ பயிற்சியில் எந்த அனுபவமும் இல்லாமல் இந்த மக்கள் அற்புதமாகப் போராடியதாகக் கூறினார்.'உக்ரேனியர்களை மீண்டும் ஒரு முறை நான் பாராட்டுகிறேன். சாதாரண மற்றும் கடின உழைப்பாளியாக அவர்கள் திகழ்கிறார்கள். ஒரு

நியூயார்க் டைம்ஸ்' செய்தியின்படி, போலந்து எல்லையில் மிகவும் இரகசியமான முறையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ரயில் மூலம் உக்ரேனுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.


போலந்தில் இருந்து உக்ரேனின் தலைநகர் கிவ்வுக்கு பைடன் மேற்கொண்ட வருகை பாதுகாப்பு காரணங்களுக்காக மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டது.

அதிபர் பைடன் தற்போது உக்ரேனை விட்டுப் புறப்பட்டு விட்டதாக தெரிய வந்துள்ளது. கடந்த சனிக்கிழமை, பைடன் தனது மனைவி ஜில்லுடன் ஒரு உணவகத்தில் இரவு

## மேற்கு நாடுகள் தான் போரை தொடங்கின! - புடின் சாடல்!

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நாட்டுக்கு ஆற்றியுள்ள ஒரு நீண்ட உரையில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டணியைக் கடுமையாகச் சாடியிருக்கிறார். உக்ரைனில் போரை மேற்கு நாடுகளே தொடங்கின என்றும் இப்போது அதனை மேலும் விரிவாக்கி வருகின்றன எனவும் புடின் குற்றம் சாட்டியிருக்கிறார். உக்ரைன் மீதான போரைத் தீவிரப்படுத்தும் விதமான அறிவுப்பு எதனையும் அவர் உரையில் விடுக்கவில்லை. உக்ரைன் போரை போர் என்று அழைப்பதை வழமை போன்றே தவிர்த்தார். விசேட படை நடவடிக்கை என்றே குறிப்பிட்டுப் பேசினார்.

உக்ரைனின் மீது அழுத்தங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக நிதானமாகவும் மிகக் கவனமாகவும் படிப் படியாக நகர்வுகளைச் செய்வோம் என்றும் அவர் அறிவித்தார்.



வழக்கமாகப் பெப்ரவரி மாதங்களில் மக்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் அவர் உரையாற்றுவது வழக்கம். இந்த முறை உக்ரைன் படையெடுப்பின் ஓராண்டு நிறைவு நாளை ஒட்டி அவரது உரை அமைந்ததால் அது உலக அளவில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஆயினும் உக்ரைன் போரைத் தீவிரப்படுத்தும் விதமான அறிவுப்பு எதனையும் அவர் தனது உரையில் விடுக்கவில்லை.(22ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளது தலைமை பற்றிய உரையாடலும் அறிவியலும்

இலங்கையின் அரசியல் பரப்பில் மீளவும் விடுதலைப்புலிகளது தலைமை பற்றிய உரையாடல் 13.02.2023 தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைமை நெடுமாறன் மற்றும் கவிஞர் காசிஆனந்தன் ஆகியோர் தஞ்சாவூர் பத்திரிகையாளர் சந்திப்பில் வெளியிட்ட கருத்துகள் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது.

2009களில் முள்ளிவாய்க்கால் போரில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் தலைமை மீளவும் உயிருடன் இருப்பதாகவும் தமிழ் மக்களின் விடிவுக்காக திட்டத்தை விரைவில் அறிவிப்பார் எனவும் சீனாவின் பிடியில் சிக்கியுள்ள இந்து சமுத்திரத்தை பாதுகாக்க வேண்டும் என்ற சாரப்படவும் அவ்வறிக்கை பதிவு செய்துள்ளது. இக்கட்டுரை விடுதலைப்புலிகளின் தலைமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு அறிவியல் ரீதியில் பதிலளிக்க முனைகிறது.

21ஆம் நூற்றாண்டின் அறிவியலின் வளர்ச்சி மற்றும் தொழில் நுட்பத்தின் முன்னேற்றம் அதீத மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. ஓரிடத்தில் பதிவு செய்யப்படும் நிழல் படத்தை வைத்துக் கொண்டு அந்த இடத்தின் சூழலையும் தட்ப வெப்பத்தையும் பாதிப்பின் விளைவுகளையும் கண்டறியக் கூடிய அளவுக்கு அறிவியல் வளர்ச்சியடைந்துள்ளது. அத்தகைய பதிவையே இறுதிக் கட்டப் போரின் பதிவுகளை சனல்-4 காட்சிகள் உலகத்திற்கு தந்துள்ளன. அது மட்டுமல்ல, இரண்டாம் உலகப் போரில் யூதர்கள் மீதான படுகொலைகளால் இழந்தவர்களைத் தேடுவதும் அவர்களது மூதாதையரின் தடயங்களைக் கண்டறிவதிலும் மரபணுவைக் கொண்டு தேடும் நடவடிக்கைகள் நிகழ்ந்து வருகின்றன. அத்தகைய அறிவியல் யுகத்திற்குள் மனித சமூகம் நுழைந்து பல தசாப்தங்களாகி விட்டது.

சாதாரண ஒளிப்படம் தரக்கூடிய அதிகூடிய வெளிப்பாடாக தரையின் இயல்புகள், வெப்பத்தின் அளவுகள், சூழலில் காணப்படும் அனைத்துவகைப் பொருட்களின் தன்மை என்பன மட்டுமன்றி அத்தகைய ஒளிப்படத்தின் காலத்தைக் கூட அளவிடும் நிலையை அறிவியல் ஏற்படுத்தி விட்டது. அவ்வாறான சற்றலைற் மூலமான ஒரு காட்சியே ஒசாமா பின்லாடன் கண்டறியப்பட்டு, தாக்குதல் நிகழ்ந்தப்பட்டு, கொல்லப்பட்டதன் காரணமாக இருந்தது என்பது நினைவு கொள்ளப்பட வேண்டும்.

2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் கொல்லப்பட்ட அனைத்து பொது மக்களதும் விடுதலைப்புலிகளதும் காட்சிகளைக் கொண்ட வீடியோக்கள், நிழற்படங்கள், குரல் ஒலிகள், தாக்குதல் பிரதேசங்கள், தாக்குதல் விமானங்கள், ஆயுதங்கள் மற்றும் அழிவுகள், அதன் சூழலென என்பன அடங்கிய சனல்-4 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையால் ஜெனீவாவில் காட்சிப்படுத்தப்பட்டது.

அத்தகைய காட்சிப் படுத்தலை அடுத்து அப்போதைய இலங்கை அரசாங்கம் அத்தகைய காட்சிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை எனவும் சோடிக்கப்பட்டவை எனவும் மறுத்திருந்தது. அதனால் அதிர்ச்சியடைந்த மனித உரிமைப் பேரவை அதனை தடயவியல் பரிசோதனைக்கு (*Forensic Investigation*) உட்படுத்தும் நோக் கில் அத்தகைய காட்சிகளை பரிசோதிக்க தனியாக தடயவியல் நிபுணர் களைக் கொண்ட குழுவொன்று (*Independent Expert*) நியமிக்கப்பட்டு அப் பரிசோதனை நிகழ்த்தப்பட்டது.

தடயவியல் என்பது அறிவியலின் உதவியுடன் குற்றச் செயல்களை ஆராயும் ஒரு துறையாகும். குற்றம் நடந்த இடத்தில் கிடைக்கும் தடயங்களை சோதனையிடுவதன் மூலம் குற்றச் செயலின் உண்மைத் தன்மையையும் நீதியின் முன்னான சாட்சியங்களையும் உறுதிப்படுத்துவதாகும். அதன் பிரகாரம் இலங்கையில் நிகழ்ந்த இறுதிப் போரின் தடயங்கள், சனல் -4 இன்



காட்சிகள் போன்றவை அனைத்தும் உண்மையானவை எனவும் உண்மையான தடயங்களைக் கொண்டுள்ளவை எனவும் அத்தடயவியல் நிபுணர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை கவனத்திற்குரியதாகும்.

அதில் விடுதலைப்புலிகளின் தலைமை உட்பட கொல்லப்பட்ட பொது மக்களது அனைத்து நிழல் படங்களும் வீடியோக்களும் பெருமளவுக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

எனவே தஞ்சாவூரில் வெளியிடப்பட்ட தகவலின் உள்ளடக்கம் பற்றிய அறிவியல்பூர்வமான உரையாடல் மேற் குறித்த தடயத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. அதில் அதிக குழப்பங்கள் தேவையற்றதாகவே தெரிகிறது. தமிழ் ஊடக வெளியினது அபரிமிதமான உரையாடல் அறிவியலை மையப்படுத்தாதுள்ளமை புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகவுள்ளது. அப்படியானால் ஏன் நெடுமாறன் மற்றும் காசி ஆனந்தன் அத்தகைய தகவலை வெளியிட்டுள்ளனர் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு இதற்கு முன்னரும் இத்தகைய செய்தியை வெளிப்படுத்தி இருவரும் செயல்பட்டுள்ளனர். அதனை விட தமிழகம் விடுதலைப் புலிகளின் தலைமையையும் அமைப்பையும் முன்னிறுத்தி அரசியல் மேற்கொள்ளும் போக்கினையும் கொண்டுள்ளமை தெரிந்த விடயமே. ஆனால் தற்போது எழுந்துள்ள உரையாடல் வேறுபட்டதாகவே உள்ளது. நெடுமாறனது பத்திரிகையாளர் சந்திப்புக்குப் பின்னர் அதிக ஊகங்களும் குழப்பங்களும் வெளியாகியுள்ளன.

அதேநேரம் அத்தகைய அம்சத்தை முன்னிறுத்தி அரசியல் மேற்கொள்ளும் சக்திகளது எழுச்சி தவிர்க்க முடியாது இடம் பெற்றுள்ளது. அதில் முக்கிய அணியாக இந்தியா-அமெரிக்காவும் அதன் தென்னிலங்கையும் குவாட் நாடுகளும் காணப்படுகின்றன. அதில் ஒரு பகுதியை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. அதன் அரசியல் வழமையானதே.

ஒன்று, ஒரு நீண்ட ஆயுதப் போராட்டத்தின் தலைமையை அதிகம் அவமதிப்பதாகவே ஈழந்தமிழர்கள் கருதுகின்றனர். ஆயுதப் போராட்ட அமைப்புகளது தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வித்திட்ட இந்தியா, அதாவது புது டில்லி அதன் சிதைவுகளுக்கும் முடிவுக்கும் காரணமாய் அமைந்தது என்பது பெரும் குற்றச்சாட்டாக ஈழத் தமிழரிடம் உள்ளது. அதில் தமிழகம் தவிர்க்கப்பட்டிருந்தது. தமிழக-ஈழத் தமிழரது உறவு பலமானதாகவே காணப்பட்டது. சிறிபெரும்புதூர் சம்பவத்திற்குப் பின்னரும் இரு தேசியங்களது உறவும் பலமாகவே காணப்பட்டது. ஆனால் தமிழக மக்களது உணர்வுகளும் எண்ணங்களும் ஈழத்தமிழருடன் நெருக்கமாக அமையும் போது தமிழக அரசியல்வாதிகள் அதனை தமது வாக்கு அரசியலுக்காக பயன்படுத்துவதாக உணரப்படுகிறது. அது மட்டுமன்றி மத்தியரசின் நலன்களை திருப்திப்படுத்தும் நடவடிக்கைக்குள் ஈழத்து அரசியலையும் தமிழக அரசியலையும் பயன்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் உண்டு. தற்போது திராவிட-மதவாத அரசியலுக்குள் ஈழத்தமிழரது அரசியல் இழுத்து விடப்பட்டதாகவும் குற்றச்சாட்டு உண்டு. ஆனால் மத்திய அரசாங்கத்தைக் கையாள தமிழக அரசியல் தேவையானதென்பதை ஈழத் தமிழர்கள் மறுதலிக்கவில்லை.



அதேநேரம் ஈழத்தமிழரது அபிலாசைகள் சிதையாமல் தமிழக-புதுடில்லி அரசியலை நிலை நிறுத்த வேண்டும் என்பதை கவனத்தில் கொள்வது அவசியமானது.

இரண்டு, தமிழகம் ஈழத்தமிழரது அரசியலில் கடந்த காலத்தில் கொண்டுள்ள ஈடுபாட்டை தற்போது காணமுடியாதுள்ளது என்பது துயரமான உண்மையாகும். தனித்து இந்தியா மத்திய அரசின் நலனுக்குட்பட்டே ஈழத் தமிழரது அரசியல் மட்டுமல்ல இலங்கைத் தீவின் அரசியல் அமைய வேண்டும் என்பதில் புதுடில்லி அக்கறையாக உள்ளது. புதுடில்லிக்குள்ளால் ஈழத் தமிழரது அரசியல் தமிழகத் தலைவர்கள் சிலரால் சிந்திக்கப்படுகிறது. ஈழத் தமிழரது அரசியல் இராம பிரானுக்குள்ளால் கட்டமைக்கும் நகர்வுகள் சமகாலத்தில் அரங்கேறி வருகிறது. இந்துத்துவ- மதவாத சிந்தனைக்குள்ளால் ஈழத்தமிழரது அரசியல் வரையமுயல்வதும் அது புதுடில்லியின் வரைபாக அமைவதும் ஏற்றுக் கொள்ள முடியாத பலவீனமாகவே தெரிகிறது. ஈழ விடுதலைப் போராட்டத்தை புதுடில்லியின் நலனுக்குட்பட்டதாக கையாள முனைந்த இந்திய கொள்கை வகுப்பாளர்கள். தற்போதும் தீர்வையும் தீர்வுக்கான வழி முறைகளையும் இந்தியா சார்ந்தே உருவாக்கப்பட வேண்டும். எனக் கருதுகின்றன.

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்



13ஆவது திருத்தத்தை அமுலாக்குவதில் சர்வதேச மட்டத்தில் இந்தியா முயன்றுள்ளது. அதனைக் கடந்து ஈழத் தமிழர்கள் எந்த அடைவையும் எட்டக் கூடாது என்பதில் இந்தியா கவனமாகவுள்ளது. ஆயுதப் போராட்டத்தின் தோற்றமும் முடிவும் அதனையே காட்டுகிறது.

மூன்றாவது, இலங்கைத் தீவின் மீதான சீனாவின் செல்வாக்கு இந்திய அமெரிக்க நலன்களைப் பாதிக்கும் விடயமாக உருவெடுத்துள்ளது. இதனைத் தடுக்கும் நகர்வுகளில் இந்தியா தனித்து தோல்வி கண்டுள்ளது. அதனால் அமெரிக்கா உட்பட்ட குவாட் நாடுகளது ஒத்துழைப்புடன் நகர முயன்றும் அதிகமான நெருக்கடியை அத்தரப்பு எதிர் கொண்டு வருகிறது.

அதனால் இலங்கைத்தீவை கையாள வேண்டிய நிலைக்குள் இந்தியா மற்றும் அமெரிக்கத் தரப்பு காணப்படுகிறது. இலங்கையின் ஜனாதிபதி மேற்கு சார்பானவராக இருந்தாலும் சீனாவின் நட்புக்குள்ளால் பயணிக்கின்றார் என்பதையும் சீனாவை மீறி இலங்கைத்தீவு செயல்படாது என்பதை சமகால நடவடிக்கைகள் தெளிவுபடுத்தியுள்ளன.

இந்தியா மீதான எதிர்ப்புணர்வே இலங்கைத்தீவின் இருப்பும் அரசியலும் என்பதை தென்னிலங்கை தெளிவாக உணர்ந்துள்ளது. அதனால் சீனாவை கையாளும் நிலையை இலங்கை ஒரு போதும் கைவிடாது என்பதை கவனத்தில் கொள்ளும் போது இந்திய-அமெரிக்க கூட்டுக்கு வலுவான சக்திகள் இலங்கைத் தீவில் அவசியமானதாக உள்ளது. அத்தகைய சக்திகள் தென்னிலங்கையை மட்டுமல்ல சீனாவையும் நெருக்கடிக்குள்ளாக்கும் சூழலை ஏற்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். அதற்கான பலமான அமைப்புகளை எதிர்காலத்தில் உருவாக்குவது பற்றிய தேவைப்பாடு இந்திய-அமெரிக்க அணிக்கு அவசியமானதாகத் தெரிகிறது. அது மட்டுமன்றி தென்னிலங்கையை குழப்பத்திற்கு உள்ளாக்குவதை விட சீனாவின் ஆரோக்கியமான இருப்பை குழப்புவதே தற்போதைய இந்திய-அமெரிக்க நகர்வாகத் தெரிகிறது. பாதுகாப்பு தொடர்பில் பேச்சுகளை நடத்தும் நோக்குடன் 20 பேர் கொண்ட அமெரிக்க தூதுக் குழு ஒன்று 14.02.2023 அன்று இலங்கைக்கு வருகை தந்துள்ளது. (22ம்பக்கம்)

# இறுதிப் போரில் 9 கப்பல்களை அழிக்க அமெரிக்காவே உதவியது - அலிசப்ரி



தமிழ் மக்களின் சுயஉரிமை பாதுகாக்கப்படுதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறியுள்ள வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, நாட்டில் இறுதி யுத்தத்தின் போது இலங்கைக்கு வந்த ஒன்பது கப்பல்களை எமது படையினர் வெற்றிகரமாக அழிப்பதற்கு அமெரிக்கப் புலனாய்வுத் தகவல்கள் உறுதுணையாக அமைந்தது என்பதை மறந்து விடக்கூடாது என்றும் தெரிவித்தார்.

21பெப் 2023 பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். தமிழ் மக்கள் இந்த நாட்டில் ஒன்றாக வாழும் மக்கள் என்பதை உணர்ந்து கொண்டு. அவர்களின் சுய உரிமை பாதுகாக்கப்படும் வகையில் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். தமிழ்மக்களின் சுய உரிமை பாதுகாக்கப்படும் வகையில் அவர்களின், மொழி, கலாசாரம் உள்ளிட்டவைகளுக்கு உரிய வாய்ப்புகளை வழங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இன மற்றும் மத பேதங்களுக்கு அப்பால் சிந்தித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் பல் தன்மை ஒருமைப்பாட்டுடன் இவ்வாறு ஆரம்பிக்கப்படும் பயணமே வெற்றி பெற முடியும் அதன் மூலமான பொருளாதார முன்னேற்றமே நிலையானதாக அமையும்.

நாட்டில் இறுதி யுத்தத்தின் போது இலங்கைக்கு வந்த ஒன்பது கப்பல்களை எமது படையினர் வெற்றிகரமாக அழிப்பதற்கு அமெரிக்கப் புலனாய்வுத் தகவல்கள் உறுதுணையாக அமைந்தது என்பதை மறந்து விடக்கூடாது. அந்த வகையில் சர்வதேச நாடுகளுடனான நல்லுறவுக்கு முன்னாள் வெளிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் செயல்பாடுகள் மிகவும் காத்திரமானதாக அமைந்தது என்றும் மறந்து விடக்கூடாது என்றார்.

# இந்தியாவின் நிபந்தனைக்கு உடன்பட சீனா அடியோடு மறுப்பு! ரணில் தெரிவிப்பு!

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் நாடுகள் முன்வைத்த அதே நிபந்தனைகளுக்கு சீனா உடன்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அனைத்து கடன் வழங்குநர்களும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து ஒருமித்த கருத்தை எட்டவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் முன்மொழிந்துள்ளது என அவர் கூறினார்.

எவ்வாறாயினும் இந்தியாவின் நிபந்தனைகளுக்கு பாரிஸ் கிளப் ஒப்புக்கொண்டாலும், அதை ஏற்க மறுத்த சீனா, தனது சொந்த நிபந்தனைகளை முன்வைக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பெங்களூரில் நடைபெறும் ஜி-20 நாடுகளின்நிதி அமைச்சர்கள் கலந்துரையாடலில் பொருளாதார வீழ்ச்சியடைந்த நாடுகளுக்கு உதவுவது குறித்துஆராயப்படவுள்ளது.

குறித்த சந்திப்பில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முறை குறித்து சீன நிதியமைச்சருடன் கலந்துரையாட உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

மேலும் சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்காவிடின் எரிபொருள், மின்வெட்டு என பொது மக்கள் பாரிய சிரமங்களை அனுபவிக்க நேரிடும் என்றும் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்தார்.

# பிரபாகரின் மகனின் மரணத்தில் மகிழ்ந்தவரை நான் ஆதரிக்க மாட்டேன்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் மறைவைக் கொண்டாடி மகிழ்ந்த காங்கிரஸ் கட்சியின் ஈ. வி.கே. எஸ். இளங்கோவனுக்கு ஆதரவாக வாக்கு சேகரிக்க மாட் டேன் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல் முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து வெளியாகும் பிரபல சஞ்சிகை குழுமமான விகடனின் ஜீனியர் விகடன் இதழுக்கு அவர் அளித்த கேள்வி பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவரிடம் எழுப்பப்பட்ட கேள்வியும் பதிலும் அப்படியே வருமாறு,

கேள்வி – தி. மு. க. கூட்டணியில் இருந்துகொண்டே ஈரோடு இடைத்தேர்தல் பரப்புரையில் உங்கள் கட்சி ஈடுபடவில்லையே... ஏன்?

பதில்– நான் சிறு வயதிலிருந்தே தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழீழவிடுதலைப் புலி ஆதரவு எனக் களத்தில் நிற்பவன். அப்படிப்பட்ட என்னால் வாக்கு அரசியலுக்காக இனப்படுகொலைக்கு காரணமாக இருந்த காங்கிரஸ் கட்சிக்கும், அதன் சின்னத்துக்கும் வாக்கு சேகரிப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. எனவேதான், ‘கை சின்னத்தில் வாக்களியுங்கள்’ என காங்கிரஸ் கட்சிக் காரர்களுக்காக நான் இதுவரை வாக்கு கேட்டதில்லை இனியும் கேட்கப் போவதில்லை. ‘பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் மறைந்த செய்தி எனக்கு மிக மிக மகிழ்ச்சி அளிக்கிறது என்று மனிதநேயமற்ற கருத்தைச் சொன்னவர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் என்றார்.

(4ம் பக்கத் தொடர்ச்சி) பெயரை வைத்து அரசியல் நடத்த அண்ணாமலை மோடியையும் வடக்கு கிழக்கையும் இணைத்துப் பேசி அரசியல் நடத்துகின்றார். இலங்கை அரசாங்கம் இவற்றையெல்லாம் கைகட்டி ஏன் வேடிக்கை பார்க்கின்றது, எல்லாம் மர்மமாகவே உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

(8ம் பக்கத் தொடர்ச்சி) மறுசீரமைப்பு என்ற கொள்கைக்கு இணங்கிய நிலையில் சீனா இரண்டு வருட கடன் ரத்துக்கு அப்பால் செல்ல மறுத்தது. இதனையடுத்தே சீனாவின் ஆதரவில்லாமல் சர்வதேச நாணய நிதியத் தின் உதவி குறித்து ஆராயப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.


SRI MARIYAMMA ASTROLOGER & JOTHIDAM
World Famous Indian Astrologer



Pandit: Guruji Arjunraj
Specialist in palm, Face & Photo, Horoscope Reading
Most Powerful Spiritualist from India
ARE YOUR DEPRESSED LONELY?
I will remove and destroy all Bad Luck, Withcraft, Obeya, Jado, Voodo & Protect your From all evils.
416-722-9498



OPEN7 DAYS
9AM - 8PM

AII RELIGIONS WELCOME! & PRIVATE AND CONFIDENTAL

I will read your past, present and future by reading your palm and face. We attained this study since 300 years in our family from fathers and forefathers. I will read the influence of effects of sun moon stars and planets on its events on your life. Please try you visit me regarding your health, family, Business, Job, Child, Astrology Vasthu,Dhrusti, Enemy,Court, Marriage, Love, Education and detailed reading and Visa all matters. I can solve it if your have any difficulty or struggle in your life then your life will be successful and bright. Please meet me once and know your readings.

- Name & Date Birth
- Hand Reading
- Past, Present and Future
- Overseas & Travel
- Marriage, Family Matters
- Husband & wife
- Children Education
- Children Mistake
- Property Court
- Enemy Problem

- Face Reading
- Horoscope
- Education & Work
- Love & Money Problem
- Divorce
- Sexual Problem
- Health & Business
- Jealousy & Black Magic
- Evill Affection
- Drinking Problem

MEET ME ONCE & SEE YOUR LIFE CHANGE 100%, REMOVAL OF BLACK MAGIC & GIVE PROTECTION
2607 Eglinton Ave, East Scarborough, ON M1K 2S2
(Eraa Super Market Upstairs, Unit #6) (Brimley & Eglinton)

# கூட்டுப் பொறிமுறை:- பகல் கனவு

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த இந்திய மத்திய இணை அமைச்சர் முருகன் மற்றும் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஆகியோரிடம், தமிழ் அரசியல் பிரமுகர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்குவது தொடர்பாக, கண்காணிக்க, இலங்கை அரசு, இந்திய அரசு, தமிழர் தரப்பு என முத்தரப்பு பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் எனக் கோரியிருக்கிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் இரண்டு சந்திப்புகள் தொடர்பாக பரிந்துரைகளை முன் வைத்திருக்கிறார். ஈழத் தமிழர்களின் நீண்டகால அரசியல் பிரச்சினை குறித்து ஈழத்தமிழ் தலைவர்கள், தமிழ்நாட்டுத் தலைவர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் அடங்கிய முத்தரப்பு மாநாட்டை இந்தியா ஏற்பாடு செய்ய வேண்டும். அதில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கு அமைய டெல்லிக்கு அழுத்தம் கொடுத்து இலங்கை தமிழர்களுக்கு ஏற்புடைய தீர்வொன்றை நோக்கி நகர வேண்டும் என்பது முதலாவது யோசனை.

தமிழ்த் தலைமைகளுடன் இந்திய ஆய்வாளர்கள், புத்திஜீவிகள், புலனாய்வு மற்றும் இராணுவ ஆலோசகர்கள் சந்திப்பொன்றை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய சந்திப்பில், இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்தும், 13ஆவது திருத்தத்தின் பலவீனமான தன்மை குறித்தும் எடுத்துக் கூற முடியும் என்பது இரண்டாவது யோசனை.


அடுத்து, செல்வம் அடைக்கலநாதனும், சுரேஸ்பிரேமச்சந்திரனும் இணைந்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசுவதற்கு, கூடிய விரைவில் வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்திருக்கிறார்கள். தமிழர் தரப்பு இப்போது ஒற்றுமையாக ஒரு கோரிக்கையை இந்தியத் தரப்பிடம் முன் வைக்கும் நிலையில் இல்லை. அவர்கள் பிரிந்து கிடக்கிறார்கள்.

அதனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான யோசனைகளை முன்வைத்திருக்கிறார்கள். மத்திய இணை அமைச்சர் முருகனும், அண்ணாமலையும், இலங்கைத் தமிழர் விவகாரங்களை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் இல்லை. அவ்வாறான ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தால், ஆளாளுக்கு ஒவ்வொரு யோசனையை முன் வைத்து நிறைவேற்றுமாறு கோரியிருப்பதிலும் நியாயம் இருந்திருக்கும்.

இது ஒரு நீண்டகாலச் சிக்கல். இந்த சிக்கலின் முடிச்சுகளை அவிழ்ப்பதும் கடினம். விமல் வீரவன்ச குறிப்பிட்டது போல, 13 ஆவது திருத்தச் சட்டத்தில் ஜே.ஆர்ஜயவர்த்தன பல முடிச்சுக்களைப் போட்டிருக்கிறார். அவருக்குப் பின்னர் வந்த ஆட்சியாளர்களும், முடிச்சுக்களை அவிழ்ப்பதாகவும், இறுக்குவதாகவும் கூறி இன்னும் சிக்கலாக்கி விட்டனர்.

இவ்வாறானதொரு இந்தியா சிக்கலை தீர்க்க தலையிடுமா என்ற கேள்வியில் தொடங்கி பல சந்தேகங்கள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிறீதரன் ஆகியோர் முன் வைத்த கோரிக்கைகள், தமிழ்த் தலைமைகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பெரியதொரு இடைவெளியை வெளிப்படுத்தியிருக்கிறது.

முன்னர், வெளிநாட்டுப் பிரமுகர்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றாகச் சந்திக்கும், ஒரே குரலை வெளிப்படுத்தும், மனுக்களை கையளிக்கும் வழக்கம் ஒன்று இருந்தது. இப்போது அப்படியில்லை. ஏட்டிக்குப் போட்டியாக கூட்டமைப்பு என்ற பெயரில் இரண்டு அணிகள் இருக்கின்றன. தனித்தனியாகச் செயற்படும் அணிகளும் உள்ளன. யார் முந்துகிறார்கள் என்ற போட்டி தான் நடக்கிறது. இதனால்



அவசர சந்திப்புகளும், அவசரத்தனமான கோரிக்கைகளும் தான் இருக்கின்றனவே தவிர காத்திரமான சந்திப்புகள், கோரிக்கைகள், யோசனைகள் இருப்பது அரிது.

சுரேஷ் பிரேமச்சந்திரன் முன்வைத்திருக்கின்ற யோசனை, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்களின் அடிப்படைகளில் இருந்து தோற்றம் பெற்றிருக்கிறது.

37ஆண்டுகளாகியும் நடைமுறைப் படுத்தப்படாமல் இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் இந்தியா, அதற்குத் தலையாட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதலில் அதனை வைத்துக் கொண்டு, சமஷ்டி தீர்வு நோக்கி நகரலாம் என்று எதிர்பார்த்த சில தமிழ்த் தலைமைகள் என எல்லோருக்கும் இப்போதைய அரசியல் நிலவரங்கள் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது.

சிங்கள பௌத்த பேரினவாதிகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரதியை தீக்கிரையாக்கி, அதனை நடைமுறைப்படுத்தினால் இரத்த ஆறு ஓடும் என்று எச்சரித்து, தேர்தல் வேளையில் பிரசாரத்தை செய்து, ரணில் விக்கிரமசிங்கவை பின்வாங்கச் செய்து விட்டனர்.

அவர் இப்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் நிலைப்பாட்டில் இல்லை என்பதை அண்மைய கொள்கைப் பிரகடன உரை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில், 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு முக்கிய சக்தியின் தலையீடு அவசியம். இந்தியாவே இதனைக் கொண்டு வந்தது என்பதால், இந்திய, இலங்கை அரசுகளும் தமிழர் தரப்பும் இணைந்த ஒரு கூட்டுப் பொறிமுறையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை சுரேஷ் பிரேமச்சந்திரன் முன்வைத்திருக்கிறார். அவ்வாறு ஒரு பொறிமுறையை உருவாக்கினால், இலங்கை அரசாங்கத்தினால் 13ஐ நடைமுறைப் படுத்துவதில் இருந்து ஒதுங்கிக் கொள்ள முடியாது. அது தமிழர் தரப்புக்கு 13 இற்குள் தீர்வைக் கொண்டு வருவதற்கு மட்டும், சாதகமான நிலையை ஏற்படுத்தும். 13 இற்கு அப்பால் செல்வதற்கு அது உதவாது.

13ற்கு அப்பால் செல்லும் முயற்சிகளை அது முடக்கி விடும். சமஷ்டி பற்றி வாயே திறக்க முடியாத நிலையையும் ஒரு கட்டத்தில் உருவாக்கலாம். ஆனால், சிக்கல் என்னவென்றால், இந்தப் பொறிமுறையை உருவாக்குவதற்கு இந்தியா இணங்குமா என்பது தான். விடுதலைப் புலிகளை அழிப்பதற்கும், அதற்கான தடைகளை அகற்றுவதற்கும் இலங்கையின் சார்பில் பசில், கோட்டா, லலித் வீரதுங்க ஆகியோரும், இந்தியாவின் சார்பில் சிவசங்கர் மேனன், எம்.கே.நாராயணன், விஜய் சிங் ஆகியோரையும் கொண்ட இரண்டு தரப்பு மூவரணிகள் நியமிக்கப்பட்டன. அந்தப் பொறிமுறை, போரை முடிவுறுத்துவதற்கு இரண்டு நாடுகளிலும், இரண்டு நாடுகளுக்கும் தடையாக உள்ள விடயங்களை ஒன்றிணைந்து அகற்றுவதில் காத்திரமான பங்கை வகித்திருந்தது.

அவ்வாறானதொரு பொறிமுறையைத் தான் 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கும் அமைக்க வேண்டும் என்பது யோசனை. ஆனால், இந்தியா 13 ஐக் கொண்டு வந்து விட்டோம், அதனை நடைமுறைப்படுத்துவது இலங்கை அரசின் கடப்பாடு. அதற்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டியது தமிழர் தரப்பின் பொறுப்பு என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறது. 13ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு வலியுறுத்துவது மட்டும் தான் தனது வேலை என்றிருக்கிறது இந்தியா. கடைசியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, 13 மற்றும் சமஷ்டித் தீர்வை கொண்டு வர இந்தியாவின் உதவியைக் கோரிய தமிழர் தரப்புக்கு இது பற்றித் தெளிவான பதில் அளிக்கப்பட்டது. 13 ஐ நடைமுறைப்படுத்துவதிலோ, சமஷ்டித் தீர்வைக் கொண்டு வரும் பேச்சுக்களிலோ இந்தியா நேரடியாகத் தொடர்பு படாது. தமிழ்த் தலைவர்கள் தான் அதற்கான பேச்சுக்களை நடத்த வேண்டும், அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று அவர் கூறியிருந்தார்.

இதற்குப் பின்னர் இந்திய மத்தியஸ்தம் கோருகின்ற தமிழர் தரப்பின் சுருதி மெல்லக் குறைந்து போனது. இந்தியா


**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



வெளியில் இருந்து அழுத்தங்களைக் கொடுப்பதாக காட்டிக் கொள்ளுமே தவிர, உள்ளே வந்து இலங்கையின் காதைப் பிடித்து, மண்டியிடச் செய்யும் என்றெல்லாம் கற்பனை செய்ய முடியாது. ஏனென்றால் பூகோள அரசியல் மற்றும் இந்திய வெளிவிவகாரக் கொள்கையை கைவிட்டு புதுடில்லி ஒரு அங்குலமேனும் நகராது. இந்தியாவின் நலன் மட்டும் தான் அதற்கு முக்கியம். இந்தியாவின் நலன்களைப் பாதிக்க கூடிய, எந்த விடயத்திலும் இந்தியா மூக்கை நுழைக்காது.

இலங்கை விவகாரத்துக்குள் மூக்கை நுழைத்தால், அது ஏற்கனவே இந்தியா தொடர்பான நம்பிக்கையீனம் அதிகளவில் ஊறிப் போயிருக்கும், சிங்கள மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்கும் என்பது புதுடெல்லிக்குத் தெரியும் அவ்வாறு சிங்கள மக்களின் எதிர்ப்புணர்வு கூர்மையடைவது, இந்தியாவின் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், புதுடெல்லி இந்த விடயத்தை கவனமாகவே கையாளும். ஏனென்றால், (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்




ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை


சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! வீண் அலைச்சல் உண்டாகும். மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கபூர்வமாக எதையும் செய்யும் எண்ணம் தோன்றும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் நீங்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து எதையும் மனம் விட்டு பேசி செய்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான கடிதப் போக்குவரத்தால் அனுகூலம் உண்டாகும்.




ரிஷபராசி அன்பர்களே! விறுவிறுப்பாக எதையும் செய்வீர்கள். எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும். மனோ தைரியம் உண்டாகும். எதையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். அந்நிய நபர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் நீங்கும். கணவன், மனைவி இருவரும் எந்த ஒரு முடிவையும் நிதானமாக யோசித்து எடுப்பது நன்மை தரும்




மிதுனராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சாதகமாக செய்து முடிப்பீர்கள். திறமை அதிகரிக்கும். திட்டமிட்டபடி செயலாற்றுவதில் கவனம் செலுத்துவீர்கள். வாகனங்களில் செல்லும் போதும், பயணங்களின் போதும் எச்சரிக்கை தேவை. கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளிடம் கனிவுடன் பேசுவது நல்லது. குடும்ப பிரச்சனைகளில் சாதகமான முடிவே உண்டாகும்.



கடகராசி அன்பர்களே! பல வழிகளிலும் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். ஆனால் எந்த ஒரு வேலையிலும் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது நல்லது. குடும்பத்தில் சுமூகமான நிலை காணப்படும். ஆனாலும் மனதில் குடும்பம் தொடர்பான கவலை, பிள்ளைகள் பற்றிய கவலை இருந்து வரும். திடீர் இடமாற்றம் ஏற்பட்டாலும் அதன் மூலம் சாதகமான நிலை உண்டாகலாம். தாய் தந்தையின் உடல் நிலையிலும் கவனம் செலுத்துவது நல்லது.



சிம்மராசி அன்பர்களே! எடுத்த வேலையை வேகத்துடனும், விவேகத்துடனும் செய்து முடிப்பீர்கள். வீடு, மனை வாங்குவதற்கு இருந்து வந்த தடைகள் நீங்கும். அதே வேளையில் வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடைகள் முழுவதுமாக நீங்கும். தாயார் ,தாய் வழி உறவினர்களுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் அகலும்.



கன்னிராசி அன்பர்களே! தனது நிதானத்தாலும், புத்திசாலித்தனமான செய்கைகளாலும் வெற்றி பெறுவீர்கள். எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் பல முறை யோசித்து செயல்படுவது நன்மை தரும். பணம் சார்ந்த பிரச்சனைகள் முற்றிலும் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது நல்லது.




துலாம்ராசி அன்பர்களே! எதையும் ஆழமாக யோசித்து திறமையுடன் செய்து முடிப்பீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை வெற்றிகரமாக செய்வீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக வந்து சேரும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் விலகி செல்வது போல் இருக்கும். விட்டு பிடிப்பது நல்லது




விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக தடைபட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிர்ஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலும் கொள்கைக்காக பாடுபடுவீர்கள். அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப் பற்றி ஆலோசனை செய்வது நல்லது. குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை அகலும். கவனம் தேவை.







தனுசுராசி அன்பர்களே! சொன்ன வாக்கை காப்பாற்றுவீர்கள். தைரியம் அதிகரிக்கும். இளைய சகோதரர்கள், நண்பர்கள் ஆகியோருடன் இருந்து வந்த மனக்கசப்புகள் மாறும். வாழ்க்கைத் துணையுடன் தேவையில்லாமல் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். தந்தையார் வழி உறவினர்களுடன் இருந்து வந்த மனத்தாங்கல்கள் தீரும். சொத்துக்கள் உங்கள் கைக்கு வந்து சேர வேண்டிய காலம் கனிந்து விட்டது



மகரராசி அன்பர்களே! அனுபவத்தையும், திறமையையும் கொண்டு காரியங்களை திறம்பட செய்வீர்கள். அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். வீண் வாக்கு வாதங்களால் பகையை வளர்த்து கொள்ளாமல் பார்த்து கொள்வது நல்லது. குடும்பத்தினருடன் விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும்.



கும்பராசி அன்பர்களே! வீண் அலைச்சல் குறையும். சிக்கல்கள் தீரும். எண்ணிய காரியம் கைகூடும் குறிக்கோள் நிறைவேறும். குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே திடீர் வாக்குவாதங்கள் உண்டாகலாம். வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டு வெளியே தங்க நேரிடலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அடுத்தவரை பார்த்து எதையும் செய்ய தோன்றலாம். அதனை விட்டு விடுவது நல்லது.



மீனராசி அன்பர்களே! வாழ்க்கையில் சந்திக்கும் கஷ்ட நஷ்டங்களை அனுபவமாக எடுத்துக் கொள்வீர்கள். எதிர்ப்புகள் விலகும். தொல்லைகள் தீரும். மனதில் இருந்த வீண்கவலைகள் நீங்கும். கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. வீண் ஆசைகள் உண்டாகலாம் கவனம் தேவை. குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் குறையும். எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## நெடுமாறன் அறிவிப்பினால் யாருக்கு பயன்?

(15ம் பக்கத் தொடர்ச்சி) உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து பதினான்கு வருடங்கள் நிறைவடையவிருக்கும் நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயம் குறைந்தபாடாக இல்லை. அதை குறைக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் இடையறாத கோரிக்கைக்கு இதனால் பாதிப்பு ஏற்படலாம் என்பது பரவலான அபிப்பிராயமாக இருக்கிறது. இராணுவத்தின் பலத்தை முன்றில் ஒரு பங்கால் குறைப்பதற்கு திட்டமிருப்பதாக அண்மையில் அரசாங்க தரப்பில் இருந்து அறிவிப்பு வெளியானது கவனிக்கத்தககது.

அரசியலமைப்புக்கான 13வதுதிருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் செய்த அறிவிப்பை அடுத்து கிளர்ந்தெழுந்திருக்கும் சிங்கள தேசியவாத சக்திகளுக்கும் மகாசங்கத்துக்கும் 'தீனி' போடுவதாகவும் இது அமைகிறது. தென்னிலங்கையில் கிளம்பிய எதிர்ப்பைக் கண்டு இப்போது ஜனாதிபதி 13 என்று வாயெடுக்கவே தயங்குகிறார்.

தங்களது மீளெழுச்சிக்காக சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கை வளர்க்க மீண்டும் புலிப்பூச்சாண்டி' காட்டுவதற்கு இந்த சந்தர்ப்பத்தை ராஜபக்சாக்கள் பயன்படுத்தவும் கூடும். மீண்டும் தமிழ்ப் பயங்கரவாதம்' தலைதூக்காமல் இருக்க வேண்டும் என்றால் தங்களது ஆட்சியே மீண்டும் வர வேண்டும் என்று அவர்கள் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

பிரபாகரனை அவரது ஆதரவாளர்களும் எதிரிகளும் ஒரு போதும் மறப்பதில்லை. அதனால் அவர் செய்திகளில் இருந்து மறைவதில்லை. எமது தமிழ்அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் தங்களுக்கு வசதியான முறையில் அவரின் பெயரைப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

தேர்தல்கள் நெருங்கும் போது அது சற்றுகூடுதலாக இருக்கும். சிங்கள அரசியல்வாதிகளும் பிரபாகரனை தமக்கு தேவைப்படும்போது அவரை சிங்களமக்கள் மத்தியில் நினைவு படுத்துவார்கள்.

ஆனால், பிரபாகரன் மீது ஆழமான பற்றுக் கொண்ட நெடுமாறன் நீண்டகாலமாக கவனத்தை கவரக்கூடியதாக செய்திகளில் அடிபடவில்லை. முதுமை காரணமாக முன்னரைப் போன்று அவரால் அரசியல் செயற்பாடுகளில் ஈடுடமுடியாமல் இருப்பது அதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம். ஆனால், 89 வயதான அவர் பிரபாகரன் பற்றிய அறிவிப்பை அடுத்து இப்போது சடுதியாக இந்திய மற்றும் இலங்கை மட்டங்களில் மாத்திரமல்ல சர்வதேச அளவிலும் ஊடகங்களை ஆக்கிரமித்திருப்பதை காணமுடிகிறது.

## கூட்டுப் பொறிமுறை:- பகல் கனவு

(21ம் பக்கத் தொடர்ச்சி) இந்தியாவுக்குச் சவாலாக உள்ள சீனாவுடனும் இது தொடர்புபட்டுள்ளது. இந்தியாவை குட்டி முந்திக் கொண்டு செல்வாக்குச் செலுத்துவதற்கு சீனா ஆர்வமாக இருக்கிறது. இவ்வாறான நிலையில், தமிழர் நலன் என்ற விடயத்துக்காக இந்தியா தனது நலன்களை விட்டுக் கொடுக்காது.

இவ்வாறான நிலையில், கூட்டுப் பொறிமுறைக்கு இந்தியா இணங்காது. கூட்டுப் பொறிமுறையில் இந்தியா இடம் பெறுவதை இலங்கையும் விரும்பாது. அதனை உள்நாட்டு விவகாரங்களில், இந்தியாவின் தலையீடு குற்றச் சாட்டுகளுக்கு வழிவகுத்து விடும். எனவே, கூட்டுப் பொறிமுறை யோசனை புதுடெல்லியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படுமா என்பது சந்தேகம் தான்.

## விடுதலைப்புலிகளது தலைமை பற்றிய...

(19ம் பக்கத் தொடர்ச்சி) இந்தக் குழுவில் இந்தோ-பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் ஜெடிடியாறோயாவும் கலந்து கொண்டுள்ளார் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும். எனவே அறிவியலின் வளர்ச்சியை தமிழ் ஊடகங்கள் கருத்தில் கொள்வது அவசியமானது. அனைத்துப் போக்குகளையும் ஊடகங்களே தீர்மானிக்கின்றன.

அதனை கருத்தில் கொண்டு நகர்த்த வேண்டிய முக்கியமான விடயத்தை அறிவியலுக்குள்ளால் தேடுவதும் அதற்கான தீர்வை முன் வைப்பதும் ஈழத்தமிழரது அரசியலுக்கு பொருத்தமானது. மீளவும் அமெரிக்க-இந்திய கூட்டு ஈழத்தமிழரது அரசியலுக்குள்ளால் தமது நலன்களை சாத்தியமாக்க முயல்கின்றன என்பதை புரிந்துகொள்ளுதல் வேண்டும். அதனால் எந்த மாற்றமும் ஈழத்தமிழரது அரசியலில் ஏற்படக்கூடியதாக அமையப் போவதில்லை என்பது கடந்த காலப்பகுதியின் அனுபவமாக உள்ளது. இத்தகைய உரையாடல்களைக் கடந்து ஈழத்தமிழரது அரசியல் கட்டமைக்கப்பட வேண்டும். அதற்கான களத்தை திசை திருப்பாது பாதுகாத்துக் கொள்வதும் கட்டமைத்துக் கொள்வதுமே தற்போதைய அவசியப்பாடாகும்.

## மேற்கு நாடுகள் தான் போரை தொடங்கின!

(18ம் பக்கத் தொடர்ச்சி) நான் மீண்டும் சொல்கிறேன். அவர்களே போரைத் தொடங்கினர், நாங்கள் அதைத் தடுக்க எங்கள் சக்தி யைப் பயன்படுத்தினோம். மேற்குலகின் இலக்கு வரம் பற்ற அதிகார சக்தியை விஸ்தரிப்பதே ஆகும். உக்ரைனுக்குத் தங்களின் ஆதரவை வழங்குவதற்காக மேற்குலகம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு வளங்களை அள்ளிக் கொட்டிப் பயன்படுத்தியது. ஒப்பிட்டுப் பார்த்தால் மற்ற நாடுகளுக்கு அவர்கள் இவ்வாறு உதவியது கிடையாது .

ரஷ்யாவிடமிருந்து நாடுகளைப் பிரித்தெடுத்த வரலாறு இப்போது மறுவளமாகத் திரும்பி வருகிறது. மேற்குலகம் அதன் அதிகார விரிவாக்கத்துக்காக இராணுவத்துக்குப் பல பில்லியன்களை முதலீடு செய்கிறது. அதே வேளையில், வளர்ந்து வரும் பொருளாதார சமத்துவமின்மையிலிருந்து உலகின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக புதிது புதிதாக எதிரிகளை உருவாக்க வேண்டிய அவசியம் மேற்கு நாடுகளுக்கு உள்ளது.

நாட்டின் இருப்பைக் காக்கவே ரஷ்யா போராடுகிறது. அதன் பாரம்பரிய எல்லைகளையும் மக்களையும் பாதுகாக்கவே போராடுகிறது. உக்ரைன் தேசத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. அதன் ஆட்சி அதிகார மையத்தையே எதிர்க்கிறோம். ரஷ்யாவை எதிர்ப்பதற்காக உக்ரைனை மேற்கு நாடுகள் பகடைக் காயாகப் பயன்படுத்துகின்றன. அமைதியான முறையில் தீர்வைக் காண எங்களால் இயன்றதைச் செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால் எங்கள் முதுகுக்குப் பின்னால் வேறு விதமான சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இவ்வாறு புடின் தனது உரையில் தெரிவித்தார்.

ஒன்றே முக்கால் மணிநேரம்நீடித்த உரையில் புடின், உக்ரைன் ஆட்சியாளர்களை முன்னாள் நாஸி ஜேர்மனியுடன் ஒப்பிட்டு அடிக்கடி விமர்சித்தார். ரஷ்யாவுக்காகப் போராடுகின்ற சகலருக்கும் தனது நன்றிக்கடனை வெளியிட்டார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600







